இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
www.ilakku.org
Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1
இதழ் 228 சனி, ஏப்ரல் 01, 2023 15 பக்கம்



# கச்சதீவுக்குக்கு இரகசியமாக புத்தர் சிலை வந்தது எப்படி?



அருட்தந்தை வசந்தன் செவ்வி



# பிரித்தானியாவில் நடைபெற்ற இலக்கின் இலக்கு நூல் வெளியீட்டுவிழா


© 2023 இலக்கு இணையம்

## பெப்ரவரியில் 23,974 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக பயணம்

கடந்த பெப்ரவரி மாதத்தில் 23,974 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களில் 6,939 பேர் வீட்டுப்பணிகளுக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இக்காலப் பகுதியில் 7,662 திறமையற்ற தொழிலாளர்கள் மற்றும் 6,582 திறமையான தொழிலாளர்களும் வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்

## இந்தியாவின் மூன்று முக்கியமான தூண்களின் சங்கமத்தில் இலங்கை உள்ளது

இந்தியாவும் ஜப்பானும் அமைதியான வளமான இந்தோபசுபிக் குறித்து பரந்துபட்ட நலன்களை பகிர்ந்துகொள்கின்றன என இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

பாத்பைன்டர் மன்றம் தொகுத்துள்ள அறிக்கையை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் இந்திய தூதுவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பிரதமர் சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு சுதந்திரமான வெளிப்படையான இந்தோ பசுபிக்கிற்கான தனது நோக்கத்தை வெளிப்படுத்தினார் எனவும் இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

ஐஆர்ஒஎ அமைப்பில் இந்தியாமுக்கியமானதொரு நாடு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## சமூக உரிமைகள் பாதிக்காமல் இருப்பதையும், பொறுப்புக்கூறலையும் இலங்கை உறுதிசெய்யவேண்டும்–HRW

தேசிய வருமானத்தை ஊக்குவிக்கும் நோக்கிலான கொள்கைகள்பொருளாதாரமற்றும் சமூக உரிமைகளை பாதிக்காமல் இருப்பதையும், ஊழலுக்கு எதிரான மறுசீரமைப்புக்கள் மூலமான பொறுப்புக்கூறலையும் இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப் பாட்டுக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் வறிய மற்றும் நடுத்தர மக்களை வெகுவாகப் பாதிக்கும் வகையில் அமைந்திருப்பதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம்,

மேலும் 'நீடிக்கப்பட்ட நிதியுதவிச்செயற்திட்டத்தின்கீழ்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## நிதி பற்றாக்குறை – நிகழ்ச்சிகளை குறைக்க பி.பி.சி முடிவு

பிரித்தானியாவின் நிதி நெருக்கடி தற்போது அதன் முன்னனி ஊடகமான பி.பி.சியையும் பாதித்துள்ளது. இந்த வருடத்தில் ஏற்பட்டுள்ள நிதி பற்றாக்குறையை சமாளிப்பதற்காக நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை 1000 மணி நேரங்களால் குறைப்பதற்கு பி.பி.சி முடிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு அது 12,500 மணி நேர நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை மேற்கொண்டிருந்தது. குறைக்கப்படவுள்ள 1000 மணி நேர நிகழ்ச்சிகளில் அரை பங்கு விளையாட்டு மற்றும் முக்கிய நிகழ்வுகள் தொடர்பான நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளதாக

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## தாய்வான் அரச தலைவர் அமெரிக்கா பயணம் – சீனா எச்சரிக்கை

தாய்வான் அரச தலைவர் ரிசாய் இங்வென் கடந்த புதன்கிழமை (29) அமெரிக்கா சென்றுள்ளது, அமெரிக்காவுக்கும், சீனாவுக்குமிடையிலான பதற்றத்தை மேலும் அதிகரித்துள் ளது.

சுயாட்சி உள்ள தனது பிரதேசத்தைமேலும்பலப்படுத்தும் முகமாக தனது அமெரிக்க பயணம் அமைந்துள்ளதாக தாய்வான் தலைவர் தெரிவித்துள்ளார். அவர் அமெரிக்காவின் நாடாளுமன்ற பேச்சாளர் கெவின் மக்கதியை சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் எச்சரிக்கைகளை தொடர்ந்து அவரின் பயணம் மிகவும் கவனமாக திட்டமிடப் பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தாய்வான் அதிபரின் அமெரிக்க பயணம் தாய்வானுக்கான அனைத்துலக ஆதரவுகளை அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க அரசு தொடர்ந்து தாய்வானுக்கு ஆயுதங்களை வழங்கி வருவதுடன், தாய்வானை

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

## 24 மணி நேரத்தில் மனிதர்களை கொல்லும் புதிய வைரஸ்



புறுண்டியில் பரவி வரும் புதிய வகை வைரசின் தொற்றுதலுக்கு உள்ளாகியவர்கள் 24 மணி நேரத்தில் மூக்கில் இருந்து குருதி வெளியேறி மரணத்தை தழுவி வருவதாக அந்த நாட்டின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் மூன்றிற்கு மேற்பட்டவர்கள் மரணத்தை தழுவியுள்ளனர். மேற்கு ஆபிரிக்க நாடான புறுண்டியில் கண்டறியப்பட்டுள்ள இந்த வைரஸ் தொற்றிய 24 மணி நேரத்தில் மனிதர்களின் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

இந்த நோய் தொற்றியவர்களில் காச்சல், தலையிடி மற்றும் வாந்தி ஆகிய அறிகுறிகள் தென்படுவதுடன், சுவாசத் தொகுதியின் இழையங்கள் பாதிக்கப்படுவதால் குருதிப் போக்கும் ஏற்படுகின்றது.

இந்த நோய் ஏற்பட்டவர்கள் விரைவாக மரணத்தை தழுவி வருவதால் மிகுந்த அச்சம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள சுகாதாரத்துறை அதிகாரிகள் தொற்று ஏற்பட்ட பகுதிகளை தனிமைப் படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய் மனிதர்களை விரைவாக கொல்வதால் தொற்று ஏற்பட்டவர்கள் மரணத்துக்காக காத்திருப்பதாக அந்த பகுதி வைத்தியசாலையின் தாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் இரு வான்படை உலங்குவானூர்திகள் மோதல் – பலர் பலி

கடந்த வியாழக்கிழமை (30) அமெரிக்காவின் கென்ரக்கிப் பகுதியில் இரண்டு வான்படை உலங்குவானூர்திகள் மோதி விபத்துக்குள்ளானதால் பல படையினர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.



எச்.எச்-60 பிளக்கெவ்க் ரக தாக்குதல் உலங்குவானூர்திகளே விபத்துக்குள்ளாகியுள்ளன. அதில் பயணித்த 9 படையினர் கொல்லப்பட்டதாக அந்த மாநிலத்தின் ஆளுனர் தெரிவித்துள்ளார்.

வழமைபோல வான்படை தளத்தில் இருந்து பயிற்சிக்காக சென்றபோதே இந்த விபத்து ஏற்பட்டதாக போட் கம்பல் வான் படை தளத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வான்படையின் 101 ஆவது வான்நகர்வு படையணியின் உலங்கு வானூர்திகளே அழிவடைந்துள்ளன. இந்த வான் நகர்வு படையணியே அமெரிக்காவின் ஒரேயொரு வான்நகர்வு படையணியாகும். இங்கு இருந்து தான் அனைத்துலக களமுனைகளுக்கு வான்நகர்வு படையணிகள் அனுப்பப்படுவதுண்டு.

## அதானியுடனான உடன்பாட்டை நிறுத்துமாறு பங்களாதேசத்திற்கு அழுத்தம்

இந்தியாவில் இருந்து பங்களாதேசத்திற்கு அதானி குழுமத்தின் எரிசக்தி நிறுவனம் ஏற்றுமதி செய்யும் மின்சாரம் தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

1600 மெகாவற் மின்சாரம் எதிர்வரும் மாதம் முதல் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட இருந்த நிலையில், அது தொடர்பில் எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்புக்களை தெரிவித்துள்ளதுடன், உடன் பாட்டை நிறுத்துமாறும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இந்தியாவில் ஜர்கன்ட் பகுதியில் உள்ள 1.7 பில்லியன் டொலர்கள் பெறுமதியான கொட்டா எனப்படும் அதானியின் தனியார் எரிசக்தி நிலையத்தில் இருந்தே இந்த மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதற்கான நிலக்கரி அவுஸ்திரேலியாவில் உள்ள அதானியின் நிலக்கரி சுரங்கத்தில் அகழப்பட்டு, இந்தியாவில் உள்ள அதானியின் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு மின்சரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.




ஆனால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விட இறக்குமதி செய்யப்படும் மின்சாரத்தின் விலை அதிகம் எனவும், பங்களாதேசத்தின் வரிகளற்ற பகுதியில் அதானியின் நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருப்பதால் அதானி

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சிறிலங்காவால் பண்பாட்டு இனஅழிப்புக்கு உள்ளாக்கப்படவுள்ள சைவஆலயங்களின் பட்டியல்

ஒட்டுச்சுட்டான்தான்தோன்றீசுவரர்ஆலயம், மாந்தை கிழக்கு பூவரங்குளம் பத்திரகாளியம்மன் கோவில், குமாரபுரம் சிறி சித்திரவேலாயுதம் முருகன் கோவில், குமுழமுனை ஆஞ்சநேயர் கோவில், பாண்டியன் குளம் சிவன் கோவில், வவனிக்குளம் சிவபுரம் சிவபுரம் சிறீமலை கோவில், குமுழமுனை குறிஞ்சிக் குமரன் கோவில், மன்னார் திருக்கேதீஸ்வரம் மயிலிட்டியில் போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட கோயில், ஓதியமலையில் வைரவர் கோயில், முள்ளியவளை குமாரபுரம் முருகன் கோயில், திருகோணமலை தென்னமரவடி கந்தசாமி கோயில், செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயம், புல்மோட்டை அரிசியாலை மலைக்கோவில், வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம், மூதூர் சூடைக்குடா மத்தளமலைப்பகுதி ஆலயம், திருகோணமலை திருக்கோணேசுவரம், மூன்று முறிப்பு சிவபுரம் கண்ணகி அம்மன் ஆலயம், சிவபுரம் ஆலயம், மாந்தை கிழக்கு ஆதி சிவன் கோயில், குஞ்சுமப்ப பெரியசாமி கோயில், சிறீமலை நீலியம்மன் கோயில், கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் கோயில், மட்டக்களப்பு தாந்தாமலை ஆலயம், மட்டக்களப்பு கச்சக்கொடி சுவாமி மலை போன்ற கோயில்கள். இந்தப் பட்டியலை ‘ தீம்புனல்’ 01.04.2023ம் திகதிய ‘தமிழ் மக்களுக்கு எதிரான கலாச்சாரப் போர்’ என்னும் ஆசிரிய தலையங்கத்தில் வெளியிட்டுள்ளது. வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று, யாழ்ப்பாணம் மந்திரி மனை, நெடுந்தீவு வெடியரன் கோட்டை, என்பன தொல்லியல் திணைக்களத்தின் பார்வையுள் விழுந்துள்ளதையும் ‘தீம்புனல்’ சுட்டிக்காட்டியுள்ளது. கூடவே நிலாவரை, கச்சதீவு அந்தோனியார் ஆலயம் என்பவற்றில் புத்தர்சிலை நிறுவும் முயற்சிகள் இடம்பெற்றுளதையும் சுட்டிக்காட்டிய தீம்புனல் கொழும்பில் கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயக் கோபுரம் கடலில் வரும் கப்பல்களுக்கு இலங்கை என்பதைக் காட்டும் அடையாளமாக இருந்ததை மாற்றி மிக உயரமான புத்தர்சிலை அமைத்து இந்நாடு சிங்கள பௌத்த நாடெனக் காட்டிய அதே பாணியிலேயே கச்சதீவு அந்தோனியார் ஆலயம் கப்பலில் வருபவர்களுக்கு இலங்கை என்பதற்கு அடையாளமாக விளங்குவதை மாற்ற புத்தர்சிலை அமைக்கப்பட்டு தமிழர் தாயகமும் சிங்கள நாடென்பதை உலகுக்கு அறிவிக்கச் சிறிலங்கா முயற்சிக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

# குருந்தூரில் நீதிமன்ற கட்டளையை மீறித் தொடரும் பௌத்தக் கட்டுமானம்

## வலிதான கட்டளை ஒன்றை வழங்குமாறு, மன்றைக் கோரிய ஆலய நிர்வாகம்



முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் சார்பில் 02.03.2023அன்று நீதிமன்றில் மன்றில் முறையீடு ஒன்று செய்யப்பட்டது.

இந் நிலையில் குருந்தூர்மலை விவகாரத்தில் அவ்வாறு நீதிமன்றக்கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு மற்றும், தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்பினர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

இலக்கு

# இறைமைக்கு முன்னுரிமை கொடுக்காத வரை சிறிலங்காவின் பண்பாட்டு இனஅழிப்புத் தொடரும்

ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் ஈழத்தமிழர்களின் ‘இந்த மண் எங்களின் சொந்த மண்’ என்னும் அவர்களின் இறைமைக்கு முன்னுரிமை கொடுத்துத் தங்களின் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்காதவரை "வெடுக்கு நாறி ஆசி சிவன் சிவலிங்கம்" என்னும் ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தொன்ம அழிப்புப் போன்ற சிறிலங்காவின் பண்பாட்டு இனஅழிப்புத் தொடரும் என்பது வெளிப்படையான உண்மை. இந்த வழிபாட்டிடம் ஆகமப்பட்ட சைவ வழிபாட்டுத் தலமாக மட்டும் விளங்காது சிங்கள குல முதல்வன் எனப்படும் விஜயனின் ஈழத்து அரசியல் புகலிட வாழ்வுக்கு முற்பட்ட வரலாற்றுக் காலம் முதலான ஈழத்தமிழரின் தொன்மை மிகு நாகர் இனவழிபாட்டிடத்தின் எச்சமாக, ஈழத்தமிழினத்தின் இறைமையின் தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் சான்றாதாரமாக விளங்கி வருகிறது. இங்கு மக்கள் ஏறிச்சென்று வழிபட கற்படி அமைக்கக் கூடச் சிறிலங்கா தொல்லியல் திணைக்களம் தடுத்து வந்தது இந்த பண்பாட்டு இனஅழிப்பைச் செய்ய என்பது இப்பொழுது உறுதியாகியுள்ளது.

ஈழத்தமிழர்களின் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையை ஒடுக்க 01. அவர்களின் இறைமைக்குச் சான்றாதாரமாகத் திகழும் வரலாற்று அடையாளங்களை அழித்தல், 02. புத்தசிலையினை கச்சதீவு முதல் ஈழத்தமிழர் தாயகம் எங்கும் வலுக்கட்டாயமாக மக்களின் விருப்பின்றி பரவலாக நிறுவி ஈழத்தமிழர் தாயகத்தைச் சிங்கள பௌத்த பூமியென உலகுக்குத் திரிபுபடுத்திக் காட்டல், என்கின்ற இரு நோக்குகளை சிறிலங்கா ஒரே நேரத்தில் படைபல மேலாண்மையின் கீழ் பௌத்த பிக்குகளின் திட்டமிடல் நெறிப்படுத்தல் முகாமைத்துவப்படுத்தலில் செய்து வருகிறது. இந்த சிங்கள பௌத்த அரசியல் கொள்கை-கோட்பாட்டின் நடைமுறைப்படுத்தலின் வெளிப்பாடே இந்த ஈழத்தமிழரின் பழங்குடி வாழ்வினை மறைக்க முயலும் பழங்குடி மக்களால் உருவாக்கப்பட்டு இன்று வரை தொடரும் வழிபாட்டிடங்களை அழித்தல் என்னும் சிறிலங்காவின் பண்பாட்டு இனஅழிப்புச் செயற்திட்டமாகத் தொடர்கிறது. இந்த சிறிலங்காவின் ஈழத்தமிழர் மீதான பண்பாட்டு இனஅழிப்புக்கு எதிராக யாழ்ப்பாணம் உட்பட தமிழர் தாயகமெங்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து சனநாயக வழிகளில் தங்கள் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தும் அதே நேரத்தில் மார்ச் 20இல் சிறிகாந்தா தலைமையில், அரசியல் கட்சிகளின் இணை எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பு செயற்பாடுகள் வேண்டுமென்றே நன்கு திட்டமிடப்பட்ட அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயல் என்பதை உலகத்தமிழர்களும் தாயகத் தமிழர்களுடன் இணைந்து உலகுக்குத் தெளிவாக எடுத்துரைத்து ஈழத்தமிழர்கள் மேலான பண்பாட்டு இனஅழிப்பு, இனத்துடைப்பு, இனஅழிப்பு என்னும் மூவகை அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயல்களையும் சிறிலங்கா தொடர்ச்சியாகச் செய்து கொண்டிருக்கிறது என்பதை உலகுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அப்பொழுதுதான் ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழர் தாயகப்பகுதியை "தன்னாட்சி பெறாத நாட்டெல்லைகளை கொண்ட பகுதி" என அறிவிக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஈழத்தமிழர்களின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்த வேண்டுகோளின் அவசர தேவையை உலகநாடுகளும் உலக அமைப்புக்களும் விளங்கிக்கொள்வர்.

ஈழத்தமிழ் தாயகத்தில் இருந்து வெளிவரும் ‘தீம்புனல்’ ஏப்ரல் முதலாம் திகதிய "தமிழ் மக்களுக்கு எதிரான கலாச்சாரப் போர்" என்னும் ஆசிரிய தலையங்கம், சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்ட வகையில் பாராளுமன்றத்தில் சட்டங்களை இயற்றி தங்களின் பண்பாட்டு இனஅழிப்பை பௌத்தமத பண்பாட்டு மீட்பு என உலகுக்கு உறுதிப்படுத்தியே இந்த பண்பாட்டு இனஅழிப்பைச் செய்வதை வெளிப்படுத்தியுள்ளது. "இலங்கையின் 823/73 ஆம் இலக்க தொல்லியல் கட்டளைச் சட்டம் 188ம் இயலில் 16ம் பிரிவின் கீழ் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருக்கும் பல சைவசமய ஆலயங்களில் பௌத்த மதம்சார்ந்த அடையாளங்கள் இருப்பதாக ரணில் - சிறிசேனா நல்லாட்சிக் காலத்திலும், அதற்கு முந்திய சிங்கள அரசாங்கங்களின் காலத்திலும் தொல்லியல் திணைக்களத்திற்கான சிறப்பு வர்த்தமானிகள் மூலம் உலகுக்கு சிறிலங்கா வெளிப்படுத்தியது. இவ்வாறு சிறிலங்கா தனது பண்பாட்டு இனஅழிப்புக்கான சட்டத் தகுதியைப் பெற்றுள்ளதைத் ‘தீம்புனல்’ குறிப்பிட்டுள்ளது. . இச்சட்டம் குறித்து ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் அலட்சியமாக இருந்ததின் விளைவே இன்று சிறிலங்கா பண்பாட்டு இனஅழிப்பைச் செய்வதை நீதிமன்றங்கள் மூலம் தடுக்க இயலாதிருப்பதன் காரணியாகவுள்ளது. இது ஈழத்தமிழ் மக்களின் விருப்பை வாழ்வை வெளிப்படுத்தும் புதிய அரசியல் தலைமையின் தேவையை உறுதிப்படுத்துகிறது. கூடவே; சிறிலங்கா வர்த்தமானி அறிவிப்பால் பௌத்த பூமிகளாக்கப்படவுள்ள சைவ வழிபாட்டுத்தலங்களின் நீண்ட பட்டியலையும் ‘தீம்புனல்’ தந்துள்ளது. அத்துடன் வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை, கன்னியா வெந்நீர்ஊற்று, யாழ்ப்பாணம் மந்திரி மனை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை என்பனவற்றின் மீது தொல்லியல் திணைக்களப் பார்வை ஏற்கனவே விழுந்துள்ளது என்பதையும் ‘தீம்புனல்’ சுட்டிக்காட்டியுள்ளது. இந்தத் தொல்லியல் திணைக்களம் ‘இலங்கைத் தீவு சிங்களவர் நாடு’ என்ற கோட்பாட்டுடன் தமிழ் முஸ்லீம் மலையக தொல்லியல் ஆராய்ச்சியாளர் எவருக்கும் இடம் கொடாத, சிங்களத் தொல்லியல் திணைக்களமாகத் தனது சிங்கள பௌத்த மயமாக்கத்தை வரலாறாக வெளிப்படுத்தி வருவதையும் தீம்புனல் சுட்டிக்காட்டியுள்ளது. இந்நேரத்தில் சிறிலங்காவால் குடிசார் உரிமைகளும் மனித உரிமைகளும் மறுக்கப்படுகின்றன எனவும், பொறுப்புக்கூறல் செய்யப்பட வேண்டுமெனவும், சிறிலங்கா ஏதோ மனித உரிமைகள் விடயத்தில் முன்னேறி வருவது போலவும், வெறுமனே எழுத்தறிக்கை விடுத்து, அதனை மாற்ற அனைத்துலகச் சட்டங்களின் கீழ் எதனையும் இதுவரை செய்யாது, சிறிலங்காவின் இனத்துடைப்புக்குக் காலஅவகாசம் கொடுக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு, அவர்களும் ஈழத்தமிழின அழிப்புக்கான சிறிலங்காவின் ஊக்கிகளாக விளங்குவதை இந்த பண்பாட்டு இனஅழிப்பை எடுத்துரைப்பதன் மூலம் உணரச் செய்தல் அவசியம். அத்துடன் இனஅழிப்பில் இருந்து ஈழத்தமிழர்களைக் காக்க, ஈழத்தமிழர்களின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரக்குமார் பொன்னம்பலம் விடுத்த "தன்னாட்சி பெறாத நாட்டெல்லையாகத் தமிழர் தாயகத்தை அறிவியுங்கள்" என்ற வேண்டுகோளை உடனடியாக ஐக்கிய நாடுகள் சபை நடைமுறைப்படுத்த உரிய செயற்பாடுகளைச் செய்யுமாறு அனைத்துலக நாடுகளையும் உலகத்தமிழர் வற்புறுத்திக் கேட்க வேண்டிய நேரமிது என்பது இலக்கின் உறுதியான எண்ணம்.

**ஆசிரியர்**




# பிரித்தானியாவில் நடைபெற்ற
# இலக்கின் இலக்கு நூல் வெளியீட்டுவிழா









கடந்த ஞாயிற்றுக்கிமை (26) அன்று பிரித்தானியாவின் தலைநகர் லண்டனில் அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையத்தின் வெளியீட்டு பிரிவான அனைத்துலக தமிழ் ஊடக மையத்தின் வார மலராக வெளியிடப்படும் இலக்கு மின்னிதழின் ஆசிரியர் தலையங் கங்களின் தொகுப்பாக வெளிவந்துள்ள இலக் கின் இலக்கு என்ற நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது.



நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். அகவணக்கத்துடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் மங்கள விளக் கினை வைத்தியர் விநாயகமூர்த்தி அவர்களும், முன்னாள் மேயரும் நகரசபை உறுப்பினருமான சுரேஸ் கிருஸ்ணா அவர்களும் நகரசபை உறுப்பினரான அவரது பாரியார் சசி கலாவும், கனகதுர்க்கை அம்மன் ஆலய தலைவர் யோகநாதன் அவர்களும், உயிரோடைத் தமிழ் வானொலி இயக்குநர் ஜோக்கிம் இருதயானந்தன் அவர்களும், முனைவர் நீற்றா பற்றிமாகரன் அவர்களும் ஏற்றி வைத்தனர்.

அதனை தொடர்ந்து வரவேற்புரையினை செல்வி ஆ.வே. முகிலினி அவர்கள் நிகழ்த் தினார். எங்களின் வரலாற்றின் எச்சங்கள் பல இடங்களில் புதைக்கப்பட்டிருக்கின்றது, மறைக் கப்பட்டிருக்கின்றது, கவர்ந்து செல்லப்பட்டு பல நூலகங்களில் காகிதங்களாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. அதை எல்லாம் திரட்ட வேண்டியது தமிழர்களின் எங்களின் கடமையாகின்றது என முகிலினி பேசும்போது தெரிவித்தார்.

ஏதோ இருந்துவிட்டோம் போகட்டும் என்ற பரிதாபப்பட்ட ஒரு இனமாக தமிழினம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றது என் பது நாம் விளங்கிகொள்ளக்கூடிய விடய மாக இருக்கின்றது. எமக்காக கண்மூடிப் போனார்கள் அந்த மாவீரர்கள். கண்மூடும் போது என்ன நினைத் திருப்பார்கள்? அடுத்த தலைமுறையினர் நாங்கள் இருக்கிறோம் என்று நினைத்திருப்பார்கள் போலும்.




இறைமையை வென்றெடுக்க நாம் அனைவரும் ஒன்று சேருவோம். இங்கு இருக்கிற எல்லா பெரியவர்களையும் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. நீங்கள் எல்லாம் எங்களுக்கு ஒரு நல்ல வழி காட்டிகளாக இருப்பீர்கள் ஒற்றுமையாக அடுத்த தலைமுறையிடம் எல்லாவற்றையும் கையளிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆட்சி செய்வது எப்படி என்று அகிலத் தமிழர் நன்கு அறிவர், சூழ்ச்சி செய்தால் எது விளையும் என்ற சூட்சுமம் எங்கள் சரித்திரம் சொல்லும் என தமிழவையின் காப்பாளர் புலவர் நல்லதம்பி சிவநாதன் அவர்கள் தனது கவிதையில் தெரிவித்தார்.



கடமை என்ற தத்துவம் எது என தரணித் தமிழர் தெளிவாகப் புரிவர். கடலில் வானில் படையாய் நின்றதும், நடுநிசியில் ஒரு பெண் தனியாக நடந்ததும் நாடகத்தில் வரும் காட்சிகள் அல்ல. படித்து பாருங்கள் ஈழ வரலாற்றை பரணிப் பாட்டின் பொருளை காண்பீர்கள். ஆண்டு வாழ்வது எப்படி என்ற அனுபவம் ஈழத் தமிழர்களுக்கு உண்டு.

பொன்னியின் செல்வன் நேற்றைய வரலாறு, வன்னியின் செல்வன் இன்றைய வரலாறு. சங்க இலக்கியம் நேற்றைய சங்கதி எங்கள் இலக்கியம் இன்றைய சங்கதி என அவர் கவிதையில் மேலும் தெரிவித்தது பெரும் கரகோசங்களை அரங்கில் ஏற்படுத்தியிருந்தது.

ஏமாற்றும் தரப்புடன் தேங்கிவிடாது உலகில் தமிழ் மக்களுடன் இணைந்து பயணிக்கும் நாடுகளை இனம் காண்பது அல்லது அதற்கான புறச்சூழல்களை உருவாக்குவது என்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறான செயற்பாடுகளை முன்னெ டுக்க வேண்டுமெனில் தமிழ் மக்களிடம்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

**பிரித்தானியாவில் ... தொடர்ச்சி...**

தெளிவான கருத்துக்களை கொண்டு செல்லக் கூடிய அவர்களின் இலட்சியத்திற்கு துணை நிற்கும் ஊடகம் தேவை என பேரியல் ஆய்வாளர் அருஸ் அவர்கள் பேசும்போது தெரிவித்திருந்தார்.



தமிழ் தேசியத்தை வலுப்படுத்தி எம் இனத்தையும், சமூகத்தையும் ஆற்றல்படுத்தி, ஆற்றுப்படுத்தும் ஊடகமாக இலக்கு ஊடகத்தை வளர்த்தெடுப்பதில் அதில் வெளிவரும் ஆசிரியர் தலையங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

எனவே தான் எமது இனத்தின் சிந்தனை பள்ளியின் ஒரு அங்கமாக அதனை நாம் பார்ப்பதுடன், இன்று நூலாகவும் வெளியிட்டுள்ளோம்.

சர்வதேச மற்றும் தாயக அரசியலை இணைத்து பயணிக்க வேண்டியது இன்று எமது தேவையாகின்றது.

உலகமயமாக்கல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையும் எமக்குள்ளது. அதற்கு இலக்கு ஊடகம் வலுச்சேர்க்கும் என்பது எமது நம்பிக்கை அந்த நம்பிக்கையை பலப்படுத்த வேண்டிய கடமை உங்களிடம் உள்ளது. அதனை தமிழ் மக்கள் வழங்க வேண்டும் என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்திருந்தார்.



முகிலினி அவர்களின் பேச்சு எமக்கு உற்சாகத்தை தருகின்றது. குறிப்பாக அடுத்த சந்ததியினரிடம் எமது ஊடகங்களாக இருக்கட்டும் அல்லது முக்கியமான துறைகளாக இருக்கட்டும் அவற்றை கையளிக்க வேண்டும் என்ற நம்பிக்கையை நீங்கள் எமக்கு தந்திருக்கிறீர்கள் என உயிரோடைத் தமிழ் வானொலியின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும் ஒலிபரப்பாளருமான தனாஞானி அவர்கள் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

எமது இறைமையை உறுதிப்படுத்துவதும் தொடர்ச்சியாக அதனை எமது மக்களிடம் கொண்டு செல்வதும் ஒரு முக்கியமான விடயம். அதனை வலியுறுத்தும் இலக்கின் ஆசிரியர் தலையங்கங்களை நாம் வாரம் தோறும் உயிரோடைத் தமிழ் வானொலியில் கொண்டு வருகின்றோம்.




மக்களின் பிரதிபலிப்பாக ஒரு விடயத்தை நான் இங்கு கூற விரும்புகின்றோன். 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் எம்மிடம் ஒரு பொதுவான திட்டமோ அல்லது கொள்கைகளோ இல்லை. நாம் அவ்வாறான கொள்கையுடனும், திட்டத்துடனும் நகராது விட்டால் எமது பாதை மிகவும் கடினமாக இருக்கும் என்பதை நான் மட்டும் கூறவில்லை எமது நேயர்களின் கருத்தாகவும் இங்கு பதிவு செய்கிறேன் என அவர் பேசும் போது மேலும் தெரிவித்தார்.



1960ஆம் ஆண்டுகளில் உலகில் 52 நாடுகளின் பரப்புக்கள் சுயாட்சி பெறாத தேசங்களாக இருந்தன. இன்று அவற்றில் 17 மட்டுமே அந்த நிலையில் இருக்கின்றன. 35 பிரதேசங்கள் நாடுகளாக மாறிவிட்டன. இதனை ஐக்கிய நாடுகள் சபை தான் மேற்கொண்டது. அமெரிக்காவினதும், பிரான்ஸினதும், பிரித்தானியாவினதும், ஸ்பெயினினதும், போத்துக்கல்லினதும் பெல்ஜியத்தினதும் காலனித்துவப் பின்னணியில் அவர்கள் இருந்தார்கள் என அறிஞரும் மூத்த அரசியல் ஆய்வாளரும் இலக்கு மின்னிதழின் ஆசிரியருமான பற்றிமாகரன் அவர்கள் நிகழ்வில் பேசும் போது தெரிவித்திருந்தார்.



அந்த தன்மையை மாற்றியது ஐக்கிய நாடுகள் சபை தான். இன்று அவைகள்



நாடுகளாக இருக்கின்றன. அதேபோலவே 1946 காலப்பகுதியில் பிரித்தானியா பாராளு மன்றத்திலே சோல்பரி ஆணைக்குழுவின் பின்னனியில் இலங்கைக்கு தன்னாட்சி கொடுக்கின்ற விவாதம் நடைபெற்றது. அதற்கான ஆவணம் இருக்கின்றது அதனை எடுத்து படிப்பீர்களானால் அந்த நேரத்தில் அவர்கள் கூறியது என்னவெனில் இலங்கைக்கு தன்னாட்சி முழுமையாக கொடுக்க முடியாது பிரித்தானியாவின் எலிசபெத் மகாராணியின் அதிகாரத்தை நிர்வாகத்தில் கொண்டதாகவே சுதந்திரம் வழங்கப்பட்டது. அது 1972 ஆம் ஆண்டு வைகாசி 22 ஆம் நாள் வரை இருந்தது.



சிங்களவர்களிடம் நிபந்தனையற்ற முறையில் முழு சுதந்திரமும் வழங்கப்படவில்லை என்பதுடன் மக்களின் பாதுகாப்பும் சிங்களவர்களிடம் முழுமையாக வழங்கப்படவில்லை. 1956 ஆம் ஆண்டு வரையில் பிரித்தானியாவின் கடற்படை திருமலையில் தரித்து நின்றது எனவும் அவர் தனது உரையில் மேலும் தெரிவித்திருந்தார்.



நூலினை அனைத்துலக ஊடக மையத்தின் பொறுப்பாளர் அருஸ் வெளியிட்டு வைக்க முதற் பிரதியினை இந்த நூலினை வெளிக்கொண்டு வருவதற்கு பலவழிகளிலும் பங்காற்றிய தொழிலதிபர் யோகநாதன் அவர்கள் பெற்றுக் கொள்ள நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த அனைவரும் மேடையில் நூலினைப் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியினை உயிரோடைத் தமிழின் ஒலிபரப்பாளர், தொகுப்பாளர் சிவா சிவபிள்ளை அவர்கள்சிறப்பாகத் தொகுத்து வழங்கியிருந்தார். நீண்ட காலத்துக்குப் பின்னர் தேச, சமூகப் பணிகளில் ஈடுபட்டிருந்த பலர் ஒருவரை ஒருவர் நேரடியாகச் சந்தித்து உரையாடுவதற்கான வாய்ப்பாகவும் வெளியீட்டு நிகழ்வு அமைய உரிய நேரத்துக்கு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவடைந்தன.

• • •

# தமிழர் மீது தொடுக்கப்பட்டுள்ள ஆபத்தான மறைமுக யுத்தம்

அகிலன்

வடக்கு - கிழக்கு மீண்டும் போராட்ட களமாகியிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக மறைமுகமான யுத்தத்தை அரசாங்கத்தின் இயந்திரங்கள் தீவிரப்படுத்தியிருக்கின்றன. நன்கு கட்டமைக்கப்பட்ட இன அடையாளங்களை அழிப்பதற்கான ஒரு போர் அனைத்துத்தரப்புக்களிலிருந்தும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள் மீண்டும் தற்காப்பு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதாகக் கருதப்படும் நிலையில், நாட்டில் மீண்டும் இனவாதம் மற்றொரு வடிவத்தில் தீவிரமடைந்துவருகிறது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயகம் என்ற கோட்பாட்டை வலுவிழக்கச் செய்வதை இலக்காகக்கொண்டு திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களுடைய அடையாளங்களை இல்லாமல் செய்வதற்காக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக்காண்பதுதான் தமது இலக்கு எனக் கூறிக்கொண்டாலும் கூட, மறுபுறத்தில் அரசாங்கத்தின் கட்டமைப்புக்கள் இனக்குரோதத்துடனேயே செயற்படுகின்றன. தமிழ் மக்களுடைய பாரம்பரிய வாழ்விடங்களை ஆக்கிரமித்து - தமிழ் மக்களுடைய வரலாற்றை முற்றாகத் துடைத்தெறிவதை நோக்கமாகக் கொண்டே இந்த செயற்பாடுகளை அரச இயந்திரங்கள் துரிதப்படுத்தியிருக்கின்றன.

இலங்கையின் வரலாற்றில் சைவசமயம் பெற்றிருந்த முக்கியத்துவம் வரலாறுகள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. 1,500 வருடங்களுக்கு முன்னர் போத்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இலங்கையின் பல பகுதிகளிலும் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் சைவ ஆலயங்கள் இருந்துள்ளன என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இதனை சிங்களப் பேராசிரியர்கள் பலர் கூட தமது ஆய்வுகளில் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இவற்றில் பெரும்பாலானவை அந்நியர் ஆட்சியில் அழிக்கப்பட்டன. இவற்றில் சில அவை இருந்த இடத்திலேயே புனரமைக்கப்பட்டன. சில ஆலயங்கள் இருந்த இடங்கள் கூட தெரியாமல் அழிக்கப்பட்டன.

முப்பது வருட காலமாக நடைபெற்ற போர் காரணமாக இராணுவ ஆக்கிரமிப்புடன் தமிழர்களின் பாரம்பரிய இடங்கள் அழிக்கப்பட்டன. தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டிடங்களை தொல்லியல் என்ற பெயரில் பௌத்த புராதன இடங்களாக மாற்றினார்கள். இதன்மூலமாக தமிழர்களை வலுவிழக்கச் செய்தார்கள். போர் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் இச்சம்பவங்கள் நடைபெற்றதால் போரின் ஒரு பகுதியாகவே இவை மறைந்துபோயின.

ஆனால், போர் முடிவடைந்த பின்னரும் இதனைத் தொடர்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனத் திணைக்களம் என்பன இதற்கான செயற்பாடுகளை நன்கு திட்டமிட்ட முறையில் இரகசியமாக முன்னெடுக்கின்றன.

சைவத்துக்கும் பௌத்தத்துக்கு நெருக்கமான தொடர்பு உள்ளது. இலங்கையில் தமிழர்கள் பலர் பௌத்தத்தை தழுவியவர்களாக இருந்துள்ளர்கள் என்பது வரலாறு. பௌத்தர்கள் அனைவரும் சிங்களவர்களல்ல. ஆனால், வட இலங்கையில் பௌத்த சின்னம் ஒன்று காணப்படுமானால், அதனை அடிப்படையாகக் கொண்டு அது சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசம் என தொல்பொருள் திணைக்களம் முடிவெடுப்பதும், அதற்காக இராணுவப் பாதுகாப்பு போடப்படுவதும், சிங்களவர்கள் கொண்டுவரப்பட்டு குடியேற் றப்படுவதும் நடைபெறுகின்றது.



தமிழ்ப் பௌத்தர்கள் இருந்துள்ளார்கள் என்பதை வரலாற்றாசிரியர்கள் பலரும் ஏற்றுக்கொள்கின்ற போதிலும், இலங்கை அரசாங்கத்தின் இயந்திரங்களாக இருக்கும் தொல்லியல் திணைக்களம் போன்றனவும், அரசியல்வாதிகள் சிலரும் இதனை வேண்டுமென்றே ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள்.

கம்போடியா, வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளிலும் பெருமளவு பௌத்த சின்னங்கள் உள்ளன. அதற்காக அந்த நாட்டு மக்களையும் சிங்களவர்கள் எனக்கூறிவிட முடியுமா?

வெறுமனே பௌத்த அடையாளத்தை மட்டும் வைத்துக்கொண்டு வடக்கில் சிங்களவர்கள் வாழ்ந்தார்கள் எனக்கூறுவதும், சைவ அடையாளங்களை அழிப்பதும் நன்கு திட்டமிட்ட இன அழிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

கீரிமலையில் இருந்த ஆதி சிவன் ஆலயம் இருந்த இடம்தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றது. இப்போது வெடுக்குநாறி மலை சிவன் ஆலய விக்கிரகங்கள் அழிக்கப்பட்டுள்ளன. குருந்தூர்மலையிலும் இதுதான் நடந்தது. கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்டு, அரச மரங்கள் கொண்டு செல்லப்பட்டு நாட்டப்பட்டுள்ளன. நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை பௌத்த -சிங்கள அடையாளமாகக் காட்டுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. திருகோணமலையிலும் இதுபோன்ற நெருக்கடிகள் உருவாகியிருக்கின்றது.

கீரிமலை ஆதி சிவன் ஆலயப்பகுதியிலிருந்து காங்கேசன்துறை வரையிலான பகுதிகள் கடந்த 33 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் பெருமளவுக்கு இராணுவம் குவிக்கப்பட்டும் இருந்தது. இதனால், அந்தப் பகுதிக்கு பொதுமக்கள் யாரும் செல்ல முடியாத நிலை இருந்தது. இங்கிருந்த சிவன் ஆலயம், கிருஷ்ணர் கோவில், கதிரமலைநாதன் கோவில் போன்றவற்றுக்கு மக்கள் செலல முடியவில்லை.

அண்மையில் கிருஷ்ணர் கோவிலை பராமரித்து வந்த மூவர் விசேட அனுமதி பெற்று அந்தப்பகுதிக்குச் சென்றிருந்த போதே அவர்களுக்கு அதிர்ச்சிகள் காத்திருந்தன. ஆதி சிவன் ஆலயம் அவ்விடத்தில் இல்லை. சித்தர் சடையம்மா மடம் முற்றாக அழிக்கப்பட்டிருக்கின்றது. அவரது சமாதியும் இருந்த இடம்தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது. பெண் சித்தர் சடையம்மாள் 1936 ஆம் ஆண்டு அங்கு வந்து தங்கி பின்னர் அங்கேயே சமாதியானதாக தகவல்கள் கூறுகின்றன. அவரைவிட மேலும் பல சித்தர்கள் அந்தப் பகுதியில் இருந்துள்ளார்கள் என்றும் அவர்களுடைய சமாதிகள் அங்கே இருந்ததாகவும் தகவல் உள்ளது. அவை அனைத்துமே அழிக்கப்பட்டுள்ளன. போர் ஒன்றை நடத்தாமல் - வெறுமனே தொல்பொருள் திணைக்களத்தை மட்டும் பயன்படுத்தி தமிழ் மக்களின் தாயகத்தையே இல் லாமல் செய்து - அவற்றை சிங்களப் பிரதேசங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொல்பொருள் திணைக்கம்தான் இவற்றை முன்னெடுப்பதால் அரசாங்கம் இதற்கும் தனக்கும் தொடர்பு இல்லை எனக் காட்டிக்கொள்கின்றது. சர்வதேசரீதியாக வரக்கூடிய விமர்சனங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு இந்த உபாயத்தை அரசாங்கம் யைாள்கின்றது.

அரசாங்கம் இவ்வாறுதான் செயற்படும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், இவற்றை அம்பலப்படுத்துவதும், அவற்றை நிறுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதும்தான் தமிழ்த் தலைமைகளின் பணியாக இருக்க வேண்டும். ஆனால், தமிழ்த் தலைமைகள் வெறுமனே அறிக்கைகள், கவனயீர்ப்புப் போராட்டங்கள் என்பவற்றுடன் தமது பணியை நிறுத்திக்கொள்கின்றன. அவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களில் கூட நூறுக்கும் அதிகமானவர்களைக் காணமுடிவதில்லை.

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் எவை, அவற்றை அபகரிப்பதற்காக அரசாங்கம் எவ்வாறான உபாயங்களைக் கைாள்கின்றது என்பதை ஆவணப்படுத்துவதற்கான முயற்சிகள் போதுமானவையாக இல்லை. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறும் நிலையிலேயே இவ் வாறான ஆக்கிரமிப்புக்களை அரசாங்க இயந்திரங்கள் செய்வதற்கு அவைதான் காரணம்.

அதாவது, தமிழ்த் தரப்பின் பலவீனம்தான் இவ்விடயத்தில் அரசாங்கத்துக்குப் பலத்தைக் கொடுக்கின்றது. சர்வதேச ரீதியாக ஐ.நா. உட்பட அதனுடன் தொடர்புபட்ட அமைப்புக்களுக்கு போதுமான ஆவணங்களை வழங்கி, இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற் கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு தமிழ்த் தலைமைகள் முன்வர வேண்டும். இல்லையெனில் வெறுமனே அறிக்கைகளை நாம் வெளியிட்டுக்கொண்டிருக்க அவர்கள் தமது வேலையை வெற்றிகரமாகச் செய்துகொண்டு போவதை தடுக்கமுடியாமலிருக்கும்.

அதேவேளையில், போராட்டங்கள் வெறுமனே அடையாளத்துக்காக நடத்தப்படுகின்றதே தவிர, தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அவை இல்லை. அதற்கான உறுதிப்பாடோ அர்ப்பணிப்போ தமிழ்க் கட்சிகளிடம் இருப்பதாகவும் தெரியவில்லை. அது குறித்தும் தமிழ்த் தலைமைகள் ஆராய்வது அவசியம்!

• • •

**கச்சதீவில் இரண்டு புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டு அரச மரங்களும் நடப்பட்டிருப்பதாக வெளியாகியிருக்கும் தகவல் இலங்கை அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்திய அரசியலிலும் இது எதிரொலித்திருக்கின்றது. கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தின் பரிபாலகர் அருட்தந்தை வசந்தன் தான் இந்த விவகாரத்தை முதலில் அம்பலப்படுத்தியவர். இந்த நிலையில், கச்சதீவில் என்ன நடைபெறுகின்றது என்பதையிட்டு உயிரோடைத் தமிழின் தாயக களம் நிகழ்வில் கலந்துகொண்டு தெரிவித்தார். அதிலிருந்து முக்கியமான பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**





# கச்சதீவுக்கு இரகசியமாக புத்தர் சிலை வந்தது எப்படி?

## அருட்தந்தை வசந்தன் செவ்வி

**கச்சதீவில் புத்தர் சிலை எதுவும் இல்லை என முதலில் மறுத்த கடற்படை சிறிய சிலை ஒன்றுதான் அங்குள்ளது என இப்போது கூறியிருக்கின்றது. இந்த விவகாரத்தை முதலில் அம்பலப்படுத்தியவர் நீங்கள்தான். எவ்வாறான நிலையில் அங்கு அதனை நீங்கள் அவதானித்தீர்கள்?**

மார்ச் மாதம் மூன்றாம் நான்காம் திகதிகளில் அங்கு திருவிழா நடைபெற்றது. இதற்காக நான் முதலாம் திகதியே அங்கு சென்றிருந்தேன். மூன்றாம் திகதி மாலை நற்கருணை திருப்பலி திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையில், அங்கு சுமார் 15 க்கும் அதிகமான பௌத்த பிக்குகள் வந்திருந்தார்கள். இவ்வளவு தொகையான பௌத்த பிக்குகள் வந்திருந்தமை அங்குள்ளவர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. எதற்காக இவ்வளவு பிக்குகள் வந்திருக்கின்றார்கள் என்ற கேள்வி அவர்களிடம் எழுந்திருந்தது. இருந்தபோதிலும் அது தொடர்பாக நாம் அதிகளவுக்கு கவனத்தை செலுத்தவில்லை.

மறுநாள் நான்காம் திகதி பெருநாள் திருப்பலிகள் அனைத்தும் நிறைவடைந்த பின்னர் - திருவிழாவுக்கு வந்திருந்த இலங்கை, இந்திய மக்கள் வெளியேறிக்கொண்டிருந்தார்கள். நான் என்னுடைய உதவியாளர்களுடன் என்னுடைய பணிகளை மேற்கொண்டிருந்தேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் கொண்டு சென்றிருந்த சில பந்தல் தகரங்கள் காணாமல் போயிருந்தன. எனவே நானும் எனது உதவியாளரும் அவற்றைத் தேடி அந்தத் தீவில் - எமது ஆலயத்துக்குப் பின்பக்கமாகச் சென்ற போது அங்கே பனை ஓலையால் அமைக்கப்பட்ட மிகவும் உயரமான வேலியை நாம் பார்த்தோம். அதற்குள் என்ன இருக்கின்றது என்பதை அறிவதற்காக உள்ளே சென்ற போது, நான்கு பக்கமும் அந்த வேலி மிகவும் உயரமாக அடைக்கப்பட்டிருந்தமையை அவதானித்தோம்.

அதனைவிட அதற்குள் அரச மரம் ஒன்று நாட்டப்பட்டு நன்கு பராமரிக்கப்படுவதையும் அவதானிக்க முடிந்தது. அந்த அரச மரத்துக்கு கீழே சுமார் மூன்றடி உயரமான புத்தர் பெருமானின் சிலை ஒன்றும். அந்த அரச மரத்துக்கு முன்பாக ஐந்து அடிக்கு மேல் உயரமான மற்றொரு சிலையும் அங்கு வைக்கப்பட்டிருந்தது. இவற்றை விட அந்த அரச மரத்தை சுற்றி புதிதாக நான்கு மரங்கள் நாட்டப்பட்டிருந்தது. அவற்றுக்கு பசளை போடப்பட்டு, தண்ணீர் ஊற்றப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டுவருவதையும் நான் அவதானித்தேன்.

இவை அனைத்தையும் நான் உடனடியாக புகைப்படமாக எடுத்துக்கொண்டேன். என்னுடன் வந்தவர்களும் அதனை அவதானித்தார்கள். இதுதான் அன்று அங்கு நடைபெற்றது. இதன் மூலமாகவே கச்சதீவில் புத்தர் சிலை இரகசியமாக அமைக்கப்பட்டிருக்கின்றது என்ற தகவல் வெளிவந்தது.

**இந்தப் புத்தர் சிலை கச்சதீவில் நிலை கொண்டுள்ள படையினரின் வழிபாட்டுக்காகத்தான் அமைக்கப்பட்டது என கடற்படை தெரிவித்திருக்கின்றது. இது ஏற்றுக் கொள்ளக் கூடியதா?**

இந்தக் கருத்தை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். இந்த விவகாரம் தொடர்பாக முதல்முதலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்திருந்தார். இது குறித்து கடற்படைப் பேச்சாளரிடம் பி.பி.சி. செய்தியாளர் கேட்ட போது அவ்வாறு எது வும் இல்லை என கடற்படைப் பேச்சாளர் மறு தலித்திருந்தார்.

கச்சதீவில் ஏழு முதல் பத்து வரையிலான கடற்படையினர்தான் இருக்கின்றார்கள். இவர்கள் வழிபடுவதற்கு ஏன் இவ்வளவு பிரமாண்டமான புத்தர் சிலை தேவை என்ற கேள்வி முன்னெழுகின்றது. அதனைவிட அரச மரம் அந்தத் தீவில் இல்லாத ஒரு மரம். கச்சதீவில் எங்குமே அரச மரம் இல்லை. எனவே இதனை திட்டமிட்ட முறையில் பிரதான நிலப்பரப்பிலிருந்து கொண்டு சென்றிருக்கின்றார்கள். அதனைவிட இப்போது நான்கு புதிய மரங்களை நட்டு வளர்க்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் நாம் பார்க்கும் போது - எதிர்காலத்திலே வரலாற்றைத் திரிவு படுத்துகின்ற அல்லது புதிதாக ஒரு பௌத்த வழிபாட்டுத் தலத்தை உருவாக்குவதுதான் இங்கு நோக்கமாக இருக்கின்றது என்பது இங்கு வெள்ளிடைமலையாகத் தெரிகின்றது. ஏனென்றால் வடக்கு கிழக்கில் இப்படியான சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றது.

கச்சதீவில் உள்ள படையினருக்கு வேண்டுமானால் சிறிய புத்தர் பெருமானின் சிலையை வைத்து அவர்கள் வணங்குவதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. அரச மரத்தை எதற்காக நட்டு வளர்க்க வேண்டும்?

கச்சதீவு என்று சொல்லும் போது நூற்றாண்டுகளாக அந்தோனியாருக்காகவே அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தீவு அது. மதங்கள், மொழிகள் அனைத்தையும் கடந்து அனைவரும் ஒன்றாக வந்து அந்தோனியார் திருவிழாவை ஆண்டாண்டு காலமாக கொண்டாடி வருகின்றோம் என்பது கடற்படையினருக்கே தெரியும்.

இந்த நிலையில் கடற்படையினர் தெரிவித்த கருத்தை நான் முற்றாக நிராகரிக்கின்றேன்.

**இந்தப் பிரச்சினை இப்போது இந்தியாவிலும் எதிரொலித்திருக்கின்றது. இந்தியா இவ்விடயத்தில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விடயத்தில் இந்தியா ஏதாவது வகையில் அழுத்தம் கொடுக்குமா?**

இவ்விடயத்தில் நான் சொல்லவிரும்புவது என்னவென்றால், கச்சதீவு என்பது கத்தோலிக்க கிறிஸ்த்தவர்களின் ஒரு பெரிய அடையாளமாக இருக்கின்றது. அதனைவிட இன – மொழி ஒற்றுமையின் அடையாளமாகவும் இருக்கின்றது. அங்கு அந்தோனியார் ஆலயத்தைத் தவிர வேறு எதுவுமே நூற்றாண்டுகள் கடந்தும் இருக்கவில்லை. இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்க வேண்டும். சமாதானத்தை மதிப்பவர்கள், இன அடையாளங்கள் பேணப்படுவதை விரும்புபவர்கள் இதற்காக நிச்சயமாக குரல் கொடுப்பார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

நேர்காணல்

# சிங்கள தேசமாகும் தமிழர் தாயகம்…

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் **ரவிகரன்**

**தமிழின அடக்குமுறைக்கு எதிராகத் தொடங்கியதுதான் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம். அதில் நிலமீட்புப் போராட்டம் என்பது ஒரு பகுதி. துப்பாக்கிகள் கொண்டு தான் ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றில்லை. அம் மக்களின் நிலங்களை அபகரித்து, அவர்களின் வாழ்வாதாரம், வாழ்விடங்களை கையகப்படுத்துவதன் மூலமும் ஓர் இனம் தனது இருப்பை தக்கவைத்துக் கொள்ள முடியாமல் செய்து, தனது பூர்வீக நிலங்களை விட்டு வலிந்து இடம்பெயர்த்துவதன் மூலம் தேசமற்றவர்கள் என்ற நிலையை அடைய வைத்தலும் இனவழிப்புத் தான்.**

**இந்த சூழலில் தமிழர் தாயகம் தொடர்ச்சியாக இலங்கை அரசு, அரச படைகள் மற்றும் சிங்கள மக்களினால் அபகரிக்கப்பட்டு வருவது குறித்து முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் அவர்கள் இலக்கு ஊடகத்திற்கு வழங்கி வரும் சிறப்பு செவ்வியின் இறுதிப் பகுதி….**



## பகுதி 4 – இறுதிப்பகுதி

வவுனியா வடக்கு பகுதியின் நெடுங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலையின் உச்சியில் இருந்த மிகவும் தொன்மை வாய்ந்த சுமார் 15 அடியை விடவும் உயரமான சிவலிங்கமொன்று உள்ளது. இந்த சிவலிங்கம் சுயம்பு லிங்கமாகவே கருதப்படுவதாக ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்தின் போசகர் வைரமுத்து பூபாலசிங்கம் தெரிவித்துள்ளார். அங்குள்ள கல்வெட்டுக்களும் அதன் தொன்மையை எடுத் துரைக்கின்றன.



இந்த நிலையில், வரலாற்று சிறப்பு மிக்க இந்த சிவன் ஆலயம் முழுமையாக இடித் தழிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரசித்தி பெற்ற கீரிமலை பகுதியிலுள்ள சிவன் ஆலயமொன்று உடைக்கப்பட்டு, அந்த பகுதியில் ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்ட சம்பவம் அண்மை காலத்தில் பதிவான பின்னணியிலும், குருந்தூர் மலையில் நீதி மன்ற தடையையும் மீறி கட்டப்பட்டு வரும் விகாரையின் பின்ன ணியிலும்,வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்திற்கு செல்ல கடந்த மூன்று வருட காலமாக தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலும் இந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இவ்வாறு இடித்தழிக்கப்பட்டுள்ளது.



'நாங்கள் அமைத்த பீடங்கள் மாத்திரமே இருக்கின்றன. விக்கிரகங்கள் ஒன்றும் இல்லை. சுயம்பு லிங்கம் இருக்கின்றது. சுயம்பு லிங்கத்தை யாராலும் அழிக்க முடியாது. நாகதம்பிரான் விக்கிரமும் இருக்கின்றது. மற்ற அனைத்து விக்கிரகங்களும் அழிக்கப்பட்டுள்ளன." என்றும் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத் தரப்பினர் குறிப்பிட் டுள்ளனர்.



மேலும் தொல்பொருள் திணைக்களம் மற்றும் காவல்துறையினருமே குறித்த ஆல யத்திற்குள் செல்ல தடை விதித்திருந்தமை யினால் அவர்களே இந்த ஆலய அழிப்புக்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில்,வெடுக்குநாறி ஆலயம் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனக்கு உறுதி வழங்கியதாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவிக்கின்றார். எனினும் குறித்த ஆலய அழிப்பைக் கண்டித்து பல்வேறு தரப்பினர் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தி தமது எதிர்ப்பை அரசுக்கு தெரிவித்துள்ளனர். அத்தோடு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மனித உரிமை ஆணைக்குழுவிலும் இது தொடர்பில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனாலும் கன்னியா வெந்நீர் ஊற்று, வெடியரசன் கோட்டை, கீரிமலை சிவன் ஆலயம் ,குருந்தூர் மலை சிவன் ஆலயம் என பல்வேறு தமிழர்களின் தொன்மையான இடங்கள் தொடர்ந்து அபகரிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது. இவை அனைத்தும் இராணுவம், காவல்துறையினரின் அனுசரணையுடனேயே நடைபெற்று வருகின்றன. தற்போது கச்சதீவிலும் கடற்படையினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், முல்லையின் எல்லைக் கிராமங்களில் மேலும் சிங்களகுடியேற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் பௌத்தமயமாக்கம், சைவ வழிபாட்டு அடையாளங்களும் காணாமலாக் கப்படுகின்றன என ரவிகரன் சுட்டிக்காட்டியுள் ளார்.



மேலும் "முல்லைத்தீவின் எல்லைக் கிரா மங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற் கொள்ளும் நோக்கில் திட்டமிட்ட பௌத்தம யமாக்கல் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் பின்னணியிலேயே எல் லைக் கிராமங்களிலுள்ள தமிழர்களின் பூர்வீக சைவ வழிபாட்டு அடையாளங்கள் திட்ட மிட்டு அரச திணைக்களங்களால் காணா மலாக்கப்படுகின்றன முல்லைத்தீவு எல்லைக் கிராமங்களில் இடம்பெறும் பௌத்தமயமாக்கல் செயற்பாடு தொடர்பில் 26.03.2023 அன்று நேரடியாக கள ஆய்வு ஒன்றினை மேற்கொண்டேன்.

கொக்குத்தொடுவாய் மக்களோடு மணற் கேணி என்னும் இடத்திற்கு நாம் சென்றிருந்தோம். இந்த மணற்கேணி என்னுமிடத்தில், தமிழர்களின் வழிபாட்டு அடையாளமான சிவலிங்கத்தை உடைத்திருப்பதாகவும் இங்கு பௌத்த மயமாக்கல் செயற்பாட்டிற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதாகவும் இப்பகுதி மக்களால் எம்மிடம் முறையிடப்பட்டிருந்தது.



அவ்வாறு அவர்கள் முறையிட்டதற்கு அமைவாக நாம் இங்கு வருகைதந்து

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இனமான உணர்வுமிக்க மனிதம் மாரீசன்

சீ.இனியவன் – சுவிற்சர்லாந்து.



நமது தாயக விடுதலைப்போராட்டத்தில் அளப் பெரியதியாகங்களின்ஊறாகபிறப்பெடுப்பது உணர்வுமிக்க மக்களின் எழுச்சியின் வடிவமே. இவ்வகையில் தேசவிடுதலை உணர்வுடன் கால மெல்லாம் வாழ்ந்து வழிகாட்டிய தேசப்பற்றாளன் ஆசீர்வாதம் சவிரிப்பிள்ளை 23.03.2023 அன்று ஒன்றாறியோ கனடாவில் காலமாகிய செய்தி அனைவர் மனங்களிலும் "தேசப் பற்றுமிக்க நல் மனிதனை இழந்துவிட்டோம்" என்ற துயரோடு அவருக்கான இரங்கலை அவரது உள்ளத்து உணர்வுகளை புரிந்து கொண்ட உறவினர்கள்,அவரிடம் கற்ற மாணவர்கள், மக்கள், போராளிகள், ஆன்மிக குருக்கள் என அவருக்கான இரங்கல் செய்திகளை பலர் பகிர்ந்து வருகின்றனர். எனவே அவரது வாழ்வியலையும் அவர் விட்டுச்செல்லும் நல் விழுமியங்களையும் சுருக்கமாக பதிவிடுதலூடாக அவரது புகழுடலுக்கு கொடுக்கும் இறுதிமரியாதையாக கருதுகின்றேன்.

**அமரர்.ஆசீர்வாதம் சவிரிப்பிள்ளை**
*(எழுத்தாளர்.கவிஞர் மாரீசன்)*
*(ஓய்வுநிலை பள்ளிமுதல்வர்-)*
*மாரீசன்கூடல், யாழ்ப்பாணம்.*

எங்கள்பேரன்பிற்கும் மதிப்பிற்கும் உரித்தான இந்த தந்தை தன் மக்களில்

*இறைபணிக்காக அருட்பணி எட்மன்ட் றெஜி னோல்ட். அ.ம.தி (முன்னாள் அன்னை இல்லம். உளவளத்துணை இயக்குனர்) (ஆன்மிகப் பணி டென்மார்க்).

*தாயக விடுதலைக்காக மாவீரர் வீரவேங்கை தனேந்திரன் (மேரிதாஸ்) 1988 இந்திய இராணுவ சுற்றிவளைப்பில் சயனைட் அருந்தி வீரச்சாவு.

*போராளி புரட்சிமாறன் (லெப்.கேணல் இம்ரான் பாண்டியன் படையணி)

*தாயக எழுச்சிப் பாடகி திருமதி மேளின் வேஜினி என தமிழர் தாயகத்தின் விடுதலை நோக்கிய பற்றுதலிலும் ஆன்மிக தளத்திலும் மக்களுக்குள் தன்னலம் பாராது பொதுநலச்சிந்தனையோடு நல் மக்களை நமக்காக உவந்த உயரிய சிந்தனை மிக்க மாவீரத்தந்தை.
இவரது ஏனைய மக்கள் அனற் ( பிரான்ஸ்) ஐறின்(பிரான்ஸ்),டொறின்(இந்தியா), நியூட்டன் மெறினோல்ட் (கனடா) ஆகியோர் புலம்பெயர் தேசத்தில் வசித்து வருகின்றனர்.

*அழகான குடும்பத்தின் தலைவனாக அன்புத் துணையாள் மொனிக்காவுடன் இல்வாழ்வில் இறுதிவரை இனிதே வாழ்ந்து அன்பு பிள்ளைகள் மருக்கள் பேரப்பிள்ளைகள் அனைவரும் பல நாடு களில் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் ஒரு கொடியில் பூத்த மலர்களாக அவர்கள் அவர்களது அன்பை பெற்று மகிழ்வுடன் வாழ்ந்தவர்.

*தனது ஆசிரியத்துவ பணிமுதல் பள்ளி முதல்வர் பணிவரை நல் ஆரோக்கியமான மாணவ சமூகத்தை உருவாக்கியவர் என் பதை நாம் அறிவோம். தனது ஆசிரிய பணியின் முதல் நியமனத்தின் மூலம் -கேகாலை புனித மரியாள் பாடசாலை -ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி -மாத்தளை புனித தோமஸ் கல்லூரி. -தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரி என மலையக பாடசாலைகளில் 1963 ஆம் ஆண்டு வரை பணியாற்றியதுடன், அங்கு மாத்தளை மாவட்ட தமிழ் ஆசிரியர் சங் கத்தை ஆரம்பித்து அவர்களின் உரிமை உயர்வுக்கு உறுதுணையாக செயற்பட்டவர்.

*அதன்பின் சொந்த மாவட்டத்தில் -யாழ்/ காங்கேசன் துறை அமெரிக்க மிசன் பாடசாலை -யாழ்/புனித சாள்ஸ் றோ.க பாடசாலை -யாழ்/ஊறணி றோ.க பாடசாலை -யாழ்/மயிலிட்டி றோ.க.பாடசால.-யாழ்/ புனித சாள்ஸ் றோ.க.பாடசாலை உப அதிபர். -யாழ்/மாரீசன்கூடல் றோ.க.பாடசாலை அதிபர் -யாழ்/இளவாலை றோ.க பாடசாலை அதிபர். எனப் பத்துப்பாடசாலைகளில் கணித ,விஞ் ஞான, ஆங்கில பாட ஆசிரியராகவும் இறுதி இரு பாடசாலைகளில் அதிபராகவும் "நல்லாசான் என்ற பெயரோடு பணியாற்றி ஓய்வு நிலை பெற்றவர்.

*தமிழீழ விடுதலைப்போராட்டம் முனைப்பு பெற்ற 1984 வேளையில் தமிழீழ தேசியத் தலைவரின் தீர்க்கமான பார்வையில் நம்பிக்கை கொண்டு போராளிகளுக்கு உறுதியூட்டி உதவிய பொதுமகன்.

*அந்த நெருக்கடியான காலங்களில் போராளி களை தேடிகுறிவைத்து இராணுவம் அலைந்து தெரிந்த வேளையில் போராளிகளை இல்லத்தில் தங்கவைத்து கண்ணின் மணிபோல காத்து வழியனுப்பிய காப்பரண் நீங்கள்.

*1987/1988 ல்இந்திய இராணுவம் நிலைகொண்டு போராளிகளை தேடியழிக்கும் போர்வையில் பொது மக்களை துன்புறுத்திய காலமதில் கைது செய்யப்பட்டு துன்பத்தை அனுபவித்தவர் நீங்கள்.

*போராட்டம் 1990களில் வெகுசன பரிமாணத்தை எட்டிய போது தனது வாழ்விட பிரதேசத்தில் போராளிகள் எல்லைக்காப்பரண்களில் நின்ற காலமதில் அவர்களுக்கு உலர் உணவு, உணவு அத்தியாவசிய தேவைகளை மக்கள் மனமுவந்து செய்வதற்கு முன்னோடியாக செயற்பட்டு அனைத்து பொது மக்களையும் பங்கேற்க வைத்தவர் நீங்கள்.

*அன்றைய காலத்தில் தாயக மக்களுக்குரிய நிழல் நிர்வாக கட்டமைப்புக்கள் உருவாக்கம் பெற்று "விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி" அரசியல் கட்சியின் சிற்றூர்அவை, வட்டவை இணக்க மன்று என்ற அனைத்திலும் மக்களின் நல் வாழ்விற்கான பணிகளில் முன்னின்று நீங்கள் செயற்பட்டது வரை மூத்த போராளி திரு.இராஜன் (முன்னாள் அரசியல் துறை பொறுப்பாளர் யாழ் மாவட்டம்) தனது இரங்கல் குறிப்பில் நினைவுபடுத்தியுள்ளார்.
*தனது நேரத்தின் ஒவ்வொரு துளியும் மக்களின் நல்வாழ்வுக்கு பயனுள்ளதாக அமையவேண்டு மென்ற உணர்வுடன் உறவுகளை இழந்த பிள்ளைகளுக்காக தமிழீழ தேசியத்தலைவரால் உருவாக்கப்பெற்ற செஞ் சோலை, காந்தரூபன் அறிவுச்சோலைகளில் ஆசிரியராக மனமுவந்து பணியாற்றியவர்.

*நீங்கள் தாயக விடுதலை மீது வைத்திருந்த நிறைவான பற்றுறுதியை தமிழீழ தேசியத் தலைவர் நன்கு அறிந்திருந்தார்.அதே போலவே தளபதிகள் போராளிகளிடையே அன்புக்குரிய தந்தையாக என்றும் மதிக்கப்பட்டீர்கள்.

*தன்னுடைய கலை இலக்கிய படைப்புக்களை இனவிடுதலைப்பற்றையும் சமூக விழுமியத் தையும் கட்டிக்காக்ககூடியவகையில் கவிதைகளா கவும் சிறுகதைகளாகவும் கட்டுரைகளாகவும் "வெளிச்சம்" சஞ்சிகை மற்றும" ஈழநாதம்' பத்திரிகையிலும் மாரீசன் எனும் புனைபெயரில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பொருளாதாரத்தில் மந்த நிலையை அடைந்து வரும் கிழக்கு மாகாணம்

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்களின் நிலைமையென்பது மிகவும் கவலைக்குரியதாகவேயிருந்து வருகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலீடுகள் முன்னெடுக்கப்படாத காரணத்தினால் தமிழர்களின் பொருளாதாரம் என்பது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வளங்கள் உள்ளபோதிலும் அதனை பயன்படுத்துவதற்கான பொருளாதார வளம் இல்லாத காரணத்தினால் அந்த வளங்கள் வீண்விரயமாவதுடன் மக்களும் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடையாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதானமாக காணப்படும் விவசாயதுறையினைக்கூட முழுமையாக கட்டியெழுப்பமுடியாத நிலையிலேயே இன்று கிழக்கு மாகாணம் காணப்படுகின்றது.

கிழக்கில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பு செயற்பாடுகளானது பல்வேறு வழிகளிலும் விஸ்வரூபம் எடுத்துவரும் நிலையில் அதனை தடுப்பதற்கு எந்தவித திராணியும் அற்றவர்களாக இன்று கிழக்கில் தமிழ் தேசியம் வாழ்ந்துவருகின்றது என்பதே கவலைக்குரியதாகும்.

கிழக்கு மாகாணத்தினை பாதுகாக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக கிழக்கில் பறிபோகும் தமிழர்களின் காணிகள் தொடர்பில் நாங்கள் தொடர்ச்சியாக எழுதி வருகின்றோம். கிழக்கில் காணிகள் என்பது வளமான காணியாகவும் தமிழர்கள் பண்டைய காலம் தொடக்கம் வளப்படுத்திய காணிகளாகவும் உள்ளதன் காரணமாக இதன்மீதான ஈர்ப்பு என்பது தென்னிலங்கையில் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக காணிகளை அபரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பெரும்பான்மை யினத்தவர்களினால் நேரடியாக அபகரிக்கப்படும் காணிகள் ஒருபுறம் மறுபுறம் கிழக்கினை மீட்கப்போகின்றோம் என்று கூறிக்கொண்டு வளமான காணிகளை பெரும்பான்மையினத்திற்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரி கள், அரசியல்வாதிகள் ஒருபுறம் என கிழக்கு மாகாணத்தில் ஆக்கிரமிப்பு பல்வேறு வழிகளிலும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பகுதியானது திருகோணமலை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் எல்லைப் பகுதியாக காணப்படுகின்றது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் வாகரையானது கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகவும் வடகிழக்குக்கு இணைப் பின்மையமாகவும் காணப்பட்டது. அதற்கு காரணம் அந்த பிரதேசத்தின் இடஅமைவு மற்றும் அங்கு காணப்படும் இயற்கை வளங்களாகும்.

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வாகரை மத்தி மற்றும் ஊரியன் கட்டு ஆகிய கிராம சேவகர் பிரிவில் 56 குடும்பங்களின் சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில் நிலைகொண்டுள்ள இலங்கைப் படையின் 233 ஆவது பிரிவு, மக்களின் காணிகளை அபகரித்து நிலைகொண்டுள்ளது.

இதேபோன்று வாகரை மாங்கேணி பகுதியில்சுமார்800ஏக்கர்காணிகள்அபரிக்கப்பட்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த காணி அபகரிப்பு மேற்கொள்ளப்பட்டு பாரியளவில் இந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியில் யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் முந்திரிகை செய்கை மேற்கொள்ளப்பட்டு இங்கிருந்து அக்காலப்பகுதியில் இலங்கை முழுவதும் முந்திரிகை பருப்பு மற்றும் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட காலம் இருந்ததாக வாகரை பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வாகரை பகுதியானது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான நிலப்பரப்பினைக் கொண்ட நீண்ட பகுதியாகும். மட்டக்களப்புக்கு தென்மேற்கில் 65 கி.மி. அமைந்துள்ள இடமாகும். தமிழர்கள் அதிகம் காணப்படும் இது கோறளைப் பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டது. கிட்டத்தட்ட 21,000 பேர் வசிக்கின்றனர். இங்குள்ளோர் மீன்பிடி மற்றும் விவசாயம் செய்பவர்களாவர். வாகரை பிரதேசமானது தொடர்ச்சியாக வறுமையின் பிடியைக்கொண்ட பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுவருகின்றது.

ஆனால் வாகரை பிரதேசமானது அனைத்து வளங்களைக்கொண்ட அழகிய பகுதியாகும். தொல்லியல் ரீதியாகவும் நீண்ட வரலாற்றுப்பின்னணியைக்கொண்ட பகுதியாகவும் இது காணப்படுகின்றது. 20க்கும் மேற்பட்ட அழகிய தீவுகளையும் கொண்ட மிகவும் அழகிய, வளங்களைக்கொண்ட பகுதியாக வாகரை பகுதி காணப்படுகின்றபோதிலும் அப்பகுதியானது ஏழை மக்கள் அதிகம் வாழும் பகுதியாகவே தொடர்ச்சியாக இருந்துவருகின்றது.

சுமார் 21 ஆயிரம் குடும்பங்கள் வாழும் வாகரைப்பகுதியில் நீர்வளம், நிலவளம், கடல் வளம் என பல்வேறு வளங்கள் நிறைந்த பகுதியாக காணப்படும் நிலையில் இன்னும் அங்கு வறுமை நிலைமையே மேலோங்கிக்காணப்படுகின்றது.

இதன்காரணமாக யுத்தம் மௌனிக்கப் பட்டதன் பின்னர் அங்குள்ள மக்களின் வறுமையினை காட்டி பெருமளவான காணிகள் தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கும் வேறு இனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் முதலீடுகள் என்ற போர்வையில் வழங்கப்பட்டபோதிலும் இதுவரையில் அங்கு எந்த முதலீடுகளும் முன்னெடுக்காத நிலையில் தாம்பெற்றுக்கொண்ட காணிகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

முன்னாள்கிழக்குமாகாணமுதலமைச்சராக பிள்ளையான் அவர்கள் இருந்தபோது வாகரை பகுதியில் பெருமளவான காணிகள் பறிபோகும் நிலைமை காணப்பட்டது. குறிப்பாக வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் என்ற பெயரில் முஸ்லிம்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்றை கட்டுவதற்காக சுமார் ஆயிரம் ஏக்கர் காணிகள் அன்றைய காலத்திருந்து முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு அதற்கான அனுமதியை வழங்குவதற்கு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கொண்டுவரப்பட்டபோது அதற்கு அன்றைய காலகட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் கடுமையான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன. எனினும் மட்டக்களப்புக்கு பல்கலைக்கழகம் கொண்டுவரப்பட்டால் அதில் மட்டக்களப்பில் உள்ள தமிழ் இளைஞர் யுவதிகள் பயனடைவார்கள் ஏன் ஐயா தடுக்கின்றீர்கள் என்று அன்று அந்த கூட்டத்தில் கேள்வியெழுப்பிய பிள்ளையானே 2020இல் பின்னர் அதற்கு எதிரான கருத்துகளை முன்வைத்துவருவதை காணமுடிகின்றது.

இன்று இளைஞர் யுவதிகளுக்கான தொழில்வாய்ப்பு, தொழில் முயற்சி என்ற அடிப்படையில் பெருமளவான காணிகளை விற்பனை செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வாகரையில் உள்ள வளங்களை முறையாக அரசாங்கமே பயன்படுத்தி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் அங்கிருந்து உலகம் எங்கும் ஏற்றுமதியை செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளது. அல்லது எமது புலம்பெயர் மக்கள் முதலீடுகளைச்செய்வதன் மூலம் அப்பகுதியில் உள்ள வளங்கள் முறையாக பயன்படுத்தப்படுமானால் வாகரை பிரதேசம் வளம் கொளிக்கும் பகுதியாக மாறும்.

இதேபோன்று அண்மையில் வாகனேரி பகுதியில் சுமார் 340 ஏக்கர் வயல்காணிகளை பொறுப்பெடுத்து அவற்றில் சூரிய மின் உற்பத்தி திட்டத்தினை மேற்கொள்வதற்காக நிறுவனம் ஒன்றுக்கு அனுமதிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அதற்கு விவசாயிகள் கடுமையான எதிர்ப்புகளை தெரிவித்ததன் காரணமாக அந்த திட்டம் வாகரை பிரதேசத்திற்கு மாற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதேபோன்று வாகரை பிரதேசத்தில் இல்மனைட் அகளும் செயற்பாட்டிற்கு எதிராக பிரதேச மக்கள் தொடர்ச்சியாக போராடிவந்த நிலையில் அவை இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் தென்னிலங்கை நிறுவனம் ஒன்றிற்கு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினை முற்றுகையிட்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களிருந்தாலும் போராட்டத்திற்கான காரணங்கள் என்பது உண்மையானதாகவே நோக்க வேண்டியுள்ளது. தனக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி வாகரை பகுதியில் பாரியளவிலான காணி தொடர்பான விடயங்களை கையாளும் நிலைமையை முன்னெடுக்கும் நிலைமை காணப்படுவதாக பரவலான குற்றச்சாட்டுகள் பிள்ளையான் மீது சுமத்தப்பட்டுவரும் நிலையில் இவ்வாறான போராட்டங்கள் மேலெழும் நிலைமையினை பார்க்கமுடியும்.

எவ்வாறாயினும் வாகரை பிரதேசத்தின் வளங்கள் என்பது முறையான திட்டமிடல்கள் பரந்தளவிலான கலந்துரையாடல்கள் மூலம் உருவாக்கப்படவேண்டும். பல வளங்கள் நிறைந்துகாணப்படும் வாகரை பிரதேசம் முழுமையாக ஆய்வுசெய்யப்பட்டு காணிகள் பறிபோகாதவாறு இயற்கை சமநிலைக்கு பாதிப்புகள் ஏற்படாதவாறான தொழில்வாய்ப்புகளையும் வருமானத்தையும் ஏற்படுத்தக்கூடிய தொழில்துறைகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டும்.

அதற்கான முன்னேற்பாடுகளை தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் புலம்பெயர்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# முடக்கப்பட்ட சமூகம்

துரைசாமி நடராஜா

ஒரு சமூகம் மேலெழும்புவதற்கு பொருளாதார ரீதியான அபிவிருத்தி உந்துசக்தியாக விளங்குகின்றது. இதன் சாத்தியப்பாடுகள் பல்துறை அபிவிருத்திக்கும் தோள் கொடுக்கின்றன. இந்த வகையில் பின்தங்கிய நிலையிலுள்ள பெருந்தோட்ட மக்களின் பொருளாதார அபிவிருத்தி கருதி காத்திரமான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றன. மேலும் தொழிலாளர்களிடையே மாற்றுத் தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தல்கள் இருந்து வருவதும் தெரிந்ததாகும். இதன் ஒரு அம்சமாக தோட்டப் பகுதிகளில் உள்ள பயிரிடப்படாத காணிகளை தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களின் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் ஊடாக பொருளாதார மேம்பாட்டிற்கு வித்திட வேண்டும் என்றும் வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றன. இந்நிலையில் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பயிரிடப்படாத காணிகளை வெளியாருக்கு பகிர்ந்தளிக்கும் ஒரு நிலை காணப்படுவதாகவும் சிலர் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையானது தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரத்தை முடக்கும் ஒரு செயற்பாடாகுமென்றும் இதனால் பாதக விளைவுகள் பலவும் மேலோங்கும் என்பதால் பயிரிடப்படாத காணிகளை வெளியாருக்கு பகிர்ந்தளிக்கும் நிலை காணப்படுமாயின் அது உடனடியாக கைவிடப்பட வேண்டுமென்றும் இவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

பெருந்தோட்ட தொழிற்றுறையில் தொடரும் நெருக்கீடுகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் இருந்து வருகின்றன. இத்தொழிற்றுறையின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தாது அரசாங்கமும் கம்பனியும் பாராமுகத்துடனேயே செயற்படுகின்றன என்பது யாவரும் அறிந்த விடயமாகும். கம்பனியின் பொறுப்பில் தோட்டங்கள் இருப்பதால் தாம் தலையிடத் தேவையில்லை. தொழிலாளர்களின் நலன்களை கம்பனியே பார்த்துக் கொள்ளட்டும் என்ற போக்கு அரசாங்கத்திடம் காணப்படுகின்றது. இது பெருந்தோட்ட மக்கள் "இலங்கையர்" என்ற பொது வரையறைக்குள் உள்ளீர்க்கப்படுவதை மறுதலிக்கும் ஒரு செயற்பாடாகும் என்றே கருத வேண்டியுள்ளது. ஒரு அரசாங்கத்துக்கு அதன் கீழுள்ள சகல மக்களின் நலன்களையும் பேண வேண்டிய மிகப் பெரும் பொறுப்புள்ளது. எனினும் காலாகாலமாக மலையக பெருந்தோட்ட மக்களின் நலன்கள் ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளன என்பது கசப்பான உண்மையாகும். பெருந்தோட்ட மக்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பதால் இந்தப் புறக்கணிப்பு தொடர்கின்றதா? என்றும் சிலர் நியாயமான கேள்வியெழுப்பி இருப்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும் என்று கருதுகின்றேன்.

பெருந்தோட்ட மக்கள் மீதான பல்வேறு புறக்கணிப்புகளும் அவர்களின் ஆணி வேரை அசைத்திருக்கின்றன. இம்மக்களின் இடப்பெயர்வினை அதிகரித்திருக்கின்றன. தேயிலைத் தொழிற்றுறை மீதான ஒரு விரக்தி நிலைக்கு அம்மக்களை இட்டுச் சென்றுள்ளதோடு அத்தொழிற்றுறையில் இருந்தும் அவர்கள் மாற்றுத் தொழில்களை நாடிச் செல்வதற்கும் வலுசேர்த்திருக்கின்றன. வறுமையின் கோரப்பிடிக்குள் அவர்கள் சிக்கித் தவிப்பதற்கும் அவர்கள் மீதான புறக்கணிப்புக்களே செல்வாக்கு செலுத்தி இருக்கின்றன. பெருந்தோட்ட மக்கள் பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி வேறெந்த துறைகளிலும் முன்னேறிவிடக் கூடாது என்பது இனவாதிகளின் குறிக்கோளாகும். இந்த இலக்கை அடைவதற்கு பட்டியல் அடிப்படையில் காலத்துக்கு காலம் காட்சிகள் அரங்கேறுகின்றன. இந்நிலைக்கு எம்மவர்கள் பலிக்கடாவாகி வருகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

இலங்கையின் பெருந்தோட்ட கட்டமைப்பு மற்றும் தொழிலாளர்களின் வாழ்வு குறித்து புத்திஜீவிகள் பல்வேறு கருத்துக்களையும் வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றுள் கலாநிதி எம்.கணேசமூர்த்தியின் கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகும்." இலங்கையின் ஒவ்வொரு தோட்டமும் இறுக்கமாக வடிவமைக்கப்பட்ட வழக்காறுகளையும் சம்பிரதாயங்களையும் வரையறைகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. அதில் வாழ்ந்த நபர்களின் சமூக பொருளாதார அந்தஸ்துப் படிமுறை மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்வந்தஸ்தின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது கடமைகளை மேற்கொள்ளப் பணிக்கப்பட்டதுடன் அப்படிமுறையினை மீற அனுமதிக்கப்படவில்லை. தொழிலாளர்களின் சுதந்திரமான அசைவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கடனால் பிணைக்கப்பட்டிருந்த நிலைமை, சம்பளங்கள் வழங்கப்பட்ட விதம், அரசாங்கம் தொழிலாளர் அசைவு தொடர்பாக இயற்றிய சட்ட திட்டங்கள் காரணமாக இலங்கையில் பிணிக்கப்பட்ட ஊழியப்படையொன்று உருவாகியதெனலாம் " என்கிறார் கலாநிதி கணேசமூர்த்தி. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முடக்கப்பட்ட வாழ்க்கை முறையில் இன்றும் முன்னேற்றகரமான போக்கு தென்படவில்லை.

தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு சம்பளங்களை வழங்குவதைக் காட்டிலும் கடன்களை வழங்குவதிலேயே மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டதாக ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. இதன் மூலம் தொழிலாளர்களை வெளிச்செல்லவிடாது குறித்த தோட்டத்திற்குள்ளேயே முடக்கி வைக்க முடியும் என்பது நிர்வாகத்தினரின் எண்ணமாக இருந்தது. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதென்பது நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் தேவையற்ற ஒரு நடவடிக்கையாகவே இருந்தது. தொழிலாளர்களின் நலன்களைப் புறந்தள்ளி அவர்களின் உழைப்பை சுரண்டி வயிறு வளர்ப்பதே முதலாளிகளின் எண்ணமாகும். இந்நிலையில் உச்ச கட்ட இலாபமீட்டல் செயற்பாடுகளுக்கு மத்தியில் தொழிலாளர்கள் நசுங்குண்டு அல்லல் பட்டதையே அவதானிக்க முடிந்தது. இத்தகைய போக்குகளுக்கு மத்தியில் பொருளாதார நெருக்கடிகளுக்கிடையில் தொழிலாளர்கள் விழிபிதுங்கும் நிலையே தொடர்ச்சியாக இருந்து வந்தது. இன்னும் கூட இருந்து வருகின்றது.

### விழலுக்கு இறைத்த நீர்

பெருந்தோட்ட மக்களின் பொருளாதார அபிவிருத்தி கருதி சுயதொழில் ஊக்குவிப்பு கடன்களை பெற்றுக் கொடுக்க வேண்டும். மாற்றுத் தொழிற்றுறையில் அவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். தேயிலைத் தொழிற்றுறை இலாபமீட்டும் ஒரு துறையாக எழுச்சி பெற்றுவரும் நிலையில் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள அதிகரிப்பை வழங்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் இவையனைத்தும் "விழலுக்கு இறைத்த நீராக' இருந்து வருவது கவலைக்குரிய ஒரு விடயமாகும். இதனிடையே தொழிலாளர்களின் பொருளாதார மேம்பாடு கருதி தோட்டப் பகுதிகளில் காணப்படும் பயிரிடப்படாத காணிகளை தொழிலாளர்களின் விவசாய நடவடிக்கைகளுக்காக பகிர்ந்தளித்து அதனூடாக அவர்களின் வாழ்வில் மறு மலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையையும் நாம் நீண்ட காலமாகவே அவதானிக்க முடிகின்றது. பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் இதற்கு அதிகமாகவே அழுத்தம் கொடுத்து வந்திருக்கின்றார் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனினும் இது இன்னும் சாத்தியப்படுவதாக இல்லை.

இதேவேளை நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பில் வலியுறுத்தல்கள் பலவும் இடம்பெற்று வருகின்றன. இலங்கையின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களுக்கு பாரிய முக்கியத்துவம் அளிக்கப்படுதல் வேண்டும். நாட்டின் தேசிய பாதுகாப்பு போன்று உணவுப் பாதுகாப்பு விடயம் கவனிக்கப்படுவது அவசியமாகும். உணவுப் பாதுகாப்பும் தேசிய பாதுகாப்புத்தான். உணவு பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்பட்டால் அது தேசிய பாதுகாப்பில் தாக்கம் செலுத்தும். உணவுப் பாதுகாப்பு கவனிக்கப்படாவிடின் வீண் குழப்பங்கள், ஸ்திரமற்ற தன்மை, சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படலாம் என்று ஐக்கிய நாடுகள் சபையும் அண்மையில் வலியுறுத்தி இருந்தது. இதற்கேற்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார். இதிலொரு அம்சமாக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பயிரிடப்படாத காணிகளை பயன்படுத்தி பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் இத்தகைய பயிரிடப்படாத காணிகளை வெளியாருக்கு பகிர்ந்தளிக்கும் வாய்ப்புள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தார். உணவுப் பாதுகாப்பிற்காக பிரதேச செயலக மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அப்பிரதேச செயலக பிரிவில் பயிரிடப்படாதுள்ள காணிகளை இனங்கண்டு அவற்றை தேவையுடையோருக்கு பகிர்ந்தளிப்பதற்கு இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்போது பெருந்தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத காணிகளும் பகிரப்படவுள்ளன. இந்நிலையில் பெருந்தோட்டக் காணிகளை வெளியாருக்கு பகிர்ந்தளிக்கும் வாய்ப்புகள் அதிகமுள்ளதாக வேலுகுமார் சந்தேகமெழுப்பியுள்ளதோடு பெருந்தோட்ட காணிகளின் பகிர்வு தொடர்பாக விசேட பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். இது தொடர்பில் மலையக அரசியல்வாதிகளின் வகிபாகம் எவ்வாறு அமைய வேண்டுமென்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

தோட்டப்புறங்களில் வெளியார் தலையீடு என்பது சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் பல்வேறு தாக்க விளைவுகளுக்கும் அடித்தளமாக அமையும். ஏற்கனவே இதுபோன்ற பல தழும்புகளையும் மலையகம் சந்தித்திருக்கின்றது. இதனை ஒரு பாடமாகக் கொள்வதோடு வெளியாருக்கு காணி வழங்கும் நடவடிக்கைகள்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்


# கச்சதீவுக்கு சீனக் கடற்படை வந்தால்தான் இந்திய அரசு குதிக்கும்

**கேள்வி:**

**கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**

இது சிங்களஅரசின்கட்டமைப்பியல்இனவழிப்பின் பாறப்பட்ட ஒரு நடவடிக்கையே என்பதில் ஐயமில்லை. தொல்லியல் திணைக்களத்தைப் பயன்படுத்தி இலங்கைத் தீவு முழுவதையும் பௌத்த நாடாக - சிங்கள பௌத்த நாடாக - காட்டும் முயற்சியில் சிங்களப் பேரினவாத அரசு ஈடுபட்டுள்ளது. இது தமிழினத்துக்கு எதிரான ஒரு பண்பாட்டுப் படையெடுப்பே ஆகும். கச்சதீவில் ஒரு புத்தர் சிலையைக் கண்டெடுக்க வழியில்லை. ஏனென்றால் அது காலங்காலமாவே ஆளரவமற்ற தீவு. எனவே அங்கு கொண்டுபோய் வைக்கிறார்கள்.





தியாகு பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்.

இளைப்பாறவும் வலை காயப் போடவும் கச்சதீவில் கரையொதுங்கும் மீனவ மக்கள் கிறித்துவர்கள் அல்லது சமயம் கருதாமல் கிறித்துவை வழிபடக் கூடியவர்கள் என்பதால்தான் அங்கு அந்தோனியார் கோயில் அமைந்தது. மீனவர்களில் ஒரு பகுதியினர் கிறித்தவர்கள் அல்ல என்றாலும் அந்தோனியார் கோயிலையோ அங்கு நடக்கும் திருவிழாவையோ அவர்கள் தங்களுக்கு அயன்மைப்பட்டதாகக் கருதியதில்லை. எனவே சிங்களக் கடற்படையினரின் வழிபாட்டுக்கென புத்தர் சிலை வைக்கப்படுவதாகச் சொல்வதை ஏற்க முடியாது.

அல்லது கச்சதீவில் நிலையான கடற்படைத் தளம் அமைப்பதற்கான வெள் ளோட்டம்தான் புத்தர் சிலையா? என்ற ஐயமும் எழுகிறது.

**கேள்வி:**

**இந்த விவகாரத்தில் ஏன் இந்தியத் தளத்தில் அல்லது தமிழக அரசியல் தலை வர்கள் சிலர் தான் கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் பெரி யளவில் கவனம்பெறவில்லையே?**

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள் என்பதே உண்மை. பா.ம.க. தலைவர் இராமதாஸ் உட னடியாகவே கண்டனம் தெரிவித்த செய்தி ஊடகங்களில் வெளிவந்தது. மற்றைய பல தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ள செய்தி உங்கள் கவனத்துக்கு வரவில்லை போலும். நானும் இளந்தமிழகம் ஒருங்கிணைப்பாளர் தோழர் செந்திலும் எங்கள் 'ஆபெல் - நீதியின் பாதை' உரையாடல் நிகழ்ச்சியில் இது குறித்துப் பேசியுள்ளோம். இந்தக் கண்டனங்கள் போதிய அளவு கவனம் பெறவில்லை எனபது மெய்தான். காரணம் இது மீனவர்களின் சிக்கலாக மட்டுமே பார்க்கப்படுகிறது. தமிழ்த் தேசிய உரிமைச் சிக்கலாகப் பார்க்கப்படவில்லை. தமிழ்நாட்டின் தேசிய இன உரிமைச் சிக்கலாக இதனை அணுகும் போக்கு ஈழத் தமிழ்த் தலைவர்களிடமும் ஊட கங்களிடமும் இருக்கிறதா?

நல்லது. தமிழ் மக்கள் மீது இந்திய அரசு நடத்தும் ஒடுக்குமுறை குறித்துத் தாயகத்திலும் புலம் பெயர் தமிழுலகிலும் தமிழீழத் தலைவர் கள் கண்டனம் தெரிவித்ததுண்டா? இந்திய அரசு 2019ஆம் ஆண்டு குடியுரிமைத் திருத்தச் சட்டம் கொண்டுவந்த போது அதை எதிர்த்துத் தமிழகமும் இந்தியாவும் போராடிக் கொண்டிருந்த போது, அதில் ஈழத் தமிழ் ஏதிலியர் நலனும் தொடர்பு கொண்டிருந்தாலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தவிர தமிழீழ மக்கள் சார்பில் யாருமே வாய்திறக்கவில்லையே, ஏன்? தமிழீழம் குறித்துத் தமிழகம் கவலைப்படுவது போலவே, தமிழகம் குறித்தும் தமிழீழமும் புரிந்து கவலைப்படுவதுதான் முறை. சரிதானே?

**கேள்வி:**

**கடற்படையின் இந்த செயற்பாடு இலங்கை இந்திய உறவுகளில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. இந்திய வல்லரசு புவிசார் அரசியல் நோக்கில் சிங்களத்தைத் தன் பிடியில் வைத்துக் கொள்வதைத்தான் முக்கியமாகக் கருதுகிறது. கச்சதீவுக்கு சீனக் கடற்படை வந்தால் அப்போதுதான் இந்திய அரசு குதிக்கும். அதுவரை அந்தோனியார் கோயிலை இடித்தால் கூட கவலைப்படாது. புத்தர் யார்? வருண சாதியை எதிர்த்த புத்தராக இருந்தால் அச்சப்படலாம். இந்த சிங்கள புத்தர் விஷ்ணுவின் இன்னோர் அவதாரம்தானே? ராஜபக்சர்கள் நடத்திய இனக்கொலைக்கு ஆசி வழங்கிய புத்தர் தானே?

**கேள்வி:**

**கச்சத்தீவு இலங்கை அரசுக்கு சொந்தமானது என்பதால் இந்தியா இதில் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை என நினைக்கின்றீர்களா? தமிழக மீனவ மக்கள் கூட கண்டனங்களை தெரிவிக்க வில்லையே?**

கச்சதீவு யாருக்குச் சொந்தம்? இலங்கைக்குச் சொந்தமா? இந்தியாவுக்குச் சொந்தமா? இரு நாடுகளுக்கும் சொந்தமில்லை, அது தமிழ்நாட்டுக்கே சொந்தம் என்பதை அடித்துச் சொல்ல வேண்டும். ஏடறிந்த வரலாற்றில் இரமநாதபுரம் சேதுபதிக்குச் சொந்தமாய் இருந்த கச்சதீவு தமிழ் மக்களுக்கே சொந்தமானது. அதனை இலங்கைக்கு கொடுத்தது யார்? தனக்குச் சொந்தமில்லாத ஒன்றை இந்தியா எப்படி இலங்கைக்குக் கொடுக்க முடியும்? கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்க இந்திரா யார்? அதை பெற்றுக் கொள்ள சிறிமா யார்?

கச்சதீவு ஒப்பந்தத்தை நீக்கம் செய்து கச்சதீவை மீட்டுத் தமிழ்நாட்டிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுதான் தமிழ்த் தேசியத்தின் கோரிக்கை. இதற்குத் தமிழீழ மக்கள் ஆதரவு தர வேண்டும்.

• • •

**அதானியுடனான ... தொடர்ச்சி ...**

குழுமம் அங்கு வரிகள் செலுத்த தேவையில்லை எனவே பங்களா தேசத்திற்கு வரிகள் மூலமும் நிதி கிடைக்காது எனவும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அதேசமயம் இந்திய மக்கள் மற்றும் சுற்றுசூழலின் பாதுகாப்பு தொடர்பில் கருத்தில் கொள்ளாமல் அதானி குழுமம் வியாபாரத்தில் ஈடுபட இந்திய அரசு அனுமதித்துள்ளது இந்தியாவிலும் எதிர்ப்புக்களை தோற்றுவித்துள்ளது.

பங்களாதேசத்தின் பொருளாதாரம் வளர்ந்து வருகின்றது. அதற்கு 2030 ஆம் ஆண்டு 34, 000 மெகாவற் மின்சக்தி தேவை. ஆனால் அதானி குழுமத்தின் மின்சக்தி மிகவும் விலை கூடியது என அமெரிக்காவை தளமாகக் கொண்ட எரிசக்தி பொருளாதார நிதி ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

**தாய்வான் அரச ... தொடர்ச்சி ...**

சுற்றியுள்ள பிரதேசங்களில் அது படைத் தளங்களையும் அமைத்து வருகின்றது. சீனாவும் தாய்வனை அண்டிய பகுதிகளில் தனது படையினரை குவித்து வருகையில் தாய்வான் அரச தலைவரின் அமெரிக்க பயணம் பதற்றம் நிறைந் ததாக கருதப்படுகின்றது.

# ஏமாற்றும் தரப்புடன் தேங்கிவிடாது நாம் முன்னோக்கி நகரவேண்டும்

**பிரித்தானியாவில் அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையத்தின் இலக்கின் இலக்கு என்ற நூல் வெளியீட்டு விழாவில் போரியல் ஆய்வாளர் அருஸ் ஆற்றிய உரை.**

ஆசிரியர் என்ன நினைக்கிறார் என்பதை மக்களுக்கு சொல்வதல்ல ஆசிரியர் தலையங்கம் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை சொல்வதே நல்ல ஆசிரியர் தலையங்கம் இது 20 ஆவது நூற்றாண்டிள் ஊடக ஆசான் என போற்றப்படும் ஆர்தர் பிரிஸ்பன் கூறிய கருத்து.

அவரின் கருத்தை பிரதிபலிப்பதாகவே அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையத்தின் வெளியீட்டு பிரிவினால் வார மலராக வெளியிடப்படும் இலக்கு மின்னிதழின் ஆசிரியர் தலையங்கங்கள் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன.

உலகின் இயக்கமும் மக்களின் நடவடிக்கைகளும் கால மாற்றத்துடன் மாறியே வருகின்றன. கடந்த 10 வருடங்களுக்கு முன்னைய நிலை இன்று இல்லை, கடந்த 10 வருடத்திற்கு முன்னர் இருந்த நிலை அதற்கு முன்னைய 10 வருடங்களில் இருந்ததில்லை.

இதனை தான் அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்ரகனின் பேச்சாளரான பிரிகேடியர் ஜெனரல் பற்றிக் றெய்டர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

அதாவது மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து நவீன தாக்குதல் விமானங்களான எப்-15, 22 மற்றும் 35 ரக விமானங்களை ஆசிய பசுபிக் மற்றும் ஐரோப்பிய பிராந்தியத்திற்கு மாற்றுவதும், அதற்கு மாற்றீடாக பழைய ஏ-10 விமானங்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு நகர்த்துவதும், உலகின் மாற்றத்திற்கு ஏற்ப அமெரிக்காவின் மாற்றம் என தெரிவித்துள்ளார்.

உலக நகர்வுகளை கண்காணித்து அதனை எதிர்கொள்ளும் முகமாக தமது அரசுகளையும் மக்களையும் அதற்கு ஏற்ப தயார்படுத்துவது ஒவ்வொரு நாடுகளிலும் இருக்கும் சிந்தனைபள்ளிகளின் பணியாக இருக்கும் போதும், அதனை மக்களிடம் கொண்டு செல்வதுடன், அவர்களைசரியான பாதையில் வழிநடத்துவதிலும் ஊடகங்களின் பங்கு முக்கியமானது.



ஒவ்வொரு நாடும் தனது பிராந்தியத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை சரியாக அறிந்து அதற்கு ஏற்ப தனது கொள்கைகளை வகுப்பதால் தான் தமது இறைமையையும், மக்களின் பாதுகப்பையும் தக்கவைத்துக் கொள்கின்றன.

மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கிய இலங்கை இன்று அனைத்துலக நாணய நிதியத்திடம் இருந்து தனக்கான நிதியை பெற்றுக்கொண்டுள்ளது. அதற்காக அவர்கள் மேற்குலகத்தையும், சீனாவையும், இந்தியாவையும் தமது இராஜதந்திரத்தால் ஒரு அணியில் கொண்டுவந்துள்ளனர்.

அனைத்துலக நாணய நிதியம் 15 அம்ச நிபந்தனைகளை முன்வைத்த போதும் அதில் தமிழ் மக்களின் இனப்பிரச்சனை தொடர்பான எந்த நிபந்தனையும் இல்லை. ஆனால் இலங்கையின் நிதி நெருக்கடியை தீர்ப்பதற்கான நிபந்தனையாக தமிழ் இனத்தின் அரசியல் மற்றும் இறைமை தொடர்பில் அனைத்துலக நாணய நிதியம் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் தளத்திலும் புலத்திலும் வைக்கப்பட்ட போதும் அவை புறக்கணிக்கப்பட்டுள்ளன.

கடந்த 14 வருடங்களாக ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு பல தீர்மானங்களை கொண்டுவந்தபோதும் அதனை அவர்கள் நிறைவேற்றுவதில் அக்கறை காண்பிக்கவில்லை என்பது தான் யதார்த்தம்.

21 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் படுகொலை ஒன்று நிகழ்ந்தது தமிழீழத்தில் தான் அங்கு 40,000 மக்கள் கொல்லப்பட்டதாக பான் கீ மூன் அமைத்த தருஸ்மர் தலைமையிலான ஆணைக்குழு தெரிவித்தது. ஆனால் இன்றுவரை அது தொடர்பில் ஐ.நாவோ இல்லை அனைத்துலக குற்றவியல் நீதி மன்றமோ நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது தான் உண்மை.

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை உறுப்பு நாடாக இல்லை எனவே நடவடிக்கை தாமதிக்கலாம் என நாம் நம்ப வைக்கப்படலாம் ஆனால் உண்மை அதுவல்ல.

ஏனெனில் கடந்த ஆண்டு ஆரம்பமாகிய உக்ரைன் போரில் 10,000 இற்கும் குறைவான மக்களே கொல்லப்பட்டதாக ஐ.நாவின் அறிக்கை தெரிவித்துள்ளது. ஆனால் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் விரைந்து செயல்பட்டு ரஸ்ய அதிபர் மீது பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

ஆனால் ரஸ்யாவும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பு நாடு இல்லை என்பது தான் இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டியது. ரஸ்ய அதிபர் தனது நாடுக்கு வந்தால் உடனடியாக கைது செய்யபோவதாக தெரிவித்துள்ளது ஜேர்மனி ஆனால் இலங்கையில் குற்றமிழைத்தவர்களை கண்டும் காணாமலும் விட்டுள்ளது அது.



இதன் மூலம் என்ன தெரிகின்றது? கடந்த 14 வருடங்களாக நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பது தான் உண்மை. ஏமாற்றுவது அவர்களின் வழக்கம் ஆனால் அதனை நம்பியதும், எமது மக்களை நம்பவைத்ததும் எமது குற்றம்.

ஒரு முனைவாக்கம் கொண்ட உலக ஒழுங்கில் நாம் நம்பிய தரப்பு போலியானது என்பதை 14 வருடங்களில் ஒவ்வொரு வருடமும் எமக்கு சொல்லியே சென்றுள்ளன. ஆனால் இன்று அந்த ஒழுங்கு சிதறிவருகின்றது.

பல் முனைவாக்கம் கொண்ட ஒரு உலகம் தோற்றம் பெறுகின்றது. இந்த மாற்றத்தை தான் கடந்த 100 வருடங்களில் காணவில்லை என்கிறார் சீனா அதிபர். இந்த ஒழுங்கு நிரந்தரமானது என்பதுடன் அதற்காக இணைந்து பணியாற்றபோவதாக தெரிவித்துள்ளது சீனாவும், ரஸ்யாவும்.

அது மட்டுமல்லாது உலகில் சமாதானத்தை ஏற்படுத்த இணைந்து செயற்படப்போவதாகவும் தெரிவித்துள்ளன இரு நாடுகளும், தமது சொற்களை செயலிலும் காண்பித்துள்ளனர் அவர்கள்.

பரம எதிரிகளாக இருந்த சவுதி அரேபியாவும் ஈரானும் கூட்டு சேர்ந்துள்ளன. தற்போது சவுதியும் சிரியாவும் கூட்டுச்சேரும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவற்றின் பின்னனியில் நிற்கின்றனது சீனா. அரபு நாடுகளை அவர்கள் ஒருங்கிணைக்க, ஆபிரிக்க நாடுகளை ரஸ்யா ஒருங்கிணைக்கின்றது.



அமெரிக்காவின் ஆருயிர் நண்பனாக இருந்த சவுதி காலத்தின் தேவை மற்றும் உலகில் ஏற்படும் மாற்றங்களை உணர்ந்து தனது மக் களின் நலன் கருதி இடம் மாறி வருகின்றது. இதனை தான் அமெரிக்க ஜெனரலின் கருத்தும் பிரதிபலிக்கின்றது.

பூகோள அரசியல் வியூகங்களில் ஒரு நாட்டை தம்வசப்படுத்த முடியவில்லை எனில் அந்த நாட்டில் உள்ள இறைமையுள்ள இனங்களின் இறைமையை கையில் எடுப்பதும் அதனை அங்கீகரிப்பதும் தான் உலக வரலாற்றில் நாம் கண்டது.

பங்களாதேசத்தில் இந்தியா செய்ததும், ரஸ்யாவுக்கு சார்பான யூகோஸ்லாவாக்கியா என்ற பெரும் தேசத்தில் வாழ்ந்த பல இனங்களின் இறைமையை கையில் எடுத்து பல நாடுகளை உருவாக்கிய மேற்குலகத்தின் செயற்பாடுகளும்,

தற்போது உக்ரைனின் டொன்பாஸ் பகுதியில் வாழும் மக்களின் இறைமையை பாதுகாக்க ரஸ்யா களமிறங்கியதும் அதன் வெளிப்பாடுகள் தான்.

அதாவது ஒரு இனத்தின் இறைமையை அந்த இனம் உலகில் தொடர்ந்து வலியுறுத்தி வருவதும், அதற்கான விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளாமல் இருப்பதும் தான் எமக்கான கதவுகளை திறக்கும். எமது இறுதி இலக்கு தொடர்பில் நாம் உறுதியாக இருப்போமானால் நாம் எந்த தீர்வு தொடர்பிலும் யாருடனும் பேசலாம், அவர்கள் முன்வைக்கும் தீர்வுகள் தொடர்பில் பரிசீலிக்கலாம்.

ஆனால் அதனை எமக்கு சாதகமாக மாற்றவேண்டுமெனில் தற்கால உலக ஒழுங்கை புரிந்துகொள்ள வேண்டும். நாம் ஏமாற்றப்படுவது எமக்கு புரிய வேண்டும். தொடர்ந்து ஏமாறுவதை நாம் தவிர்க்க வேண்டும்.



தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## சமூக உரிமைகளை ... தொடர்ச்சி ...

இலங்கைக்கு 3 பில்லியன் டொலர்களை வழங்குவதற்குக் கடந்த 20 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியது.

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் உத்தியோகத்தர்மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டு சுமார் 7 மாதங்களின் பின்னரே பணிப்பாளர் சபையினால் இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியச்செயற்திட்டத்தின் பிரகாரம் வருமானத்தை அதிகரித்தல், ஊழலை இல்லாதொழித்தல் மற்றும் சமூகப்பாதுகாப்பை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டிருப்பினும், அச்செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ள விதத்தை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் மேலும் பாதிப்படையக்கூடிய அச்சுறுத்தல் நிலவுகின்றது.

ஊழல்மோசடிகளும், உயர்மட்டத்தினர் பயன்பெறக்கூடியவகையிலான வரிச்சலுகைகளுமே தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணமாகும்.

எனவே கடந்தகாலப் போர்க்குற்றங்கள் குறித்தும், தற்போதைய முறையற்ற நிர்வாகம் தொடர்பிலும் நாட்டு மக்களுக்குப் பொறுப்புக்கூறுவது அவசியம் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியானது, இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிக்கான அடிப்படைக்காரணத்தைக் களையும் அதேவேளை, நாட்டின் மீட்சிக்கு உதவுவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் சர்வதேச சட்டங்களின் படி பொருளாதார நெருக்கடியைக்கையாளும்போது மனித உரிமைகளை மேலும் வலுப்படுத்தக்கூடியவகையில் அதனை முன்னெடுக்கவேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கும் நிதியியல் கட்டமைப்புக்களுக்கும் இருக்கின்றது.

அதேபோன்று அத்தியாவசியப்பொருட்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான குறைந்த - நடுத்தர வருமானம் பெறும் மக்களின் இயலுமையைக் குறைக்கக்கூடியவாறான கொள்கை உருவாக்கத்தைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்'' என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருந்தூரில் நீதி ... தொடர்ச்சி ...

*30.03.2023*ஆம் திகதியன்று நீதிமன்றில் தமது அறிக்கைகளை சமர்ப் பிக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரணராஜா உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய குறித்த வழக்கானது முல்லைத்தீவில் *30.03.2023*இன்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்தவகையில் தொல்லியல் திணைக்களம் சார்பில், தொல்லியல்திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க உள்ளிட்ட குழுவினரும், காவல்துறையினரும் மன்றில் முன்னிலையாகியிருந் தனர்.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப் பினர் துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் உள்ளிட்டவர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது தமது மூத்த சட்டத்தரணிகளும், மூத்த அலுவலர்களும் நீதிமன்றிற்கு வரமுடியாத காரணத்தினால், தமது விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கு பிறிதொரு தவணையினை வழங்குமாறு காவல்துறையினரும், தொல்பொருள் திணைக்களத்தினரும் நீதிமன்றிடம் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந் நிலையில் குருந்தூர்மலைப் பிரதேசத்திலே நீதிமன்றக்கட்டளையை மீறி பௌத்த விகாரைக்குரிய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதானது, நீதிமன்றத்தை அவமதித்து இடம்பெறுகின்ற செயற்பாடு என, குருந் தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டி யிருந்தனர்.

அத்தோடு பொதுமக்கள் நீதிமன்றின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக் கக்கூடியதொரு செயற்பாடு எனவும் இதன்போது சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை குறித்த குருந்தூர்மலைப் பிரதேசத்திற்கு நீதவான் அவர்கள் நேரடியாக வருகைதந்து அங்கு இடம்பெறும் விடயங்களை பார்வையிட்டு, ஏற்கனவே இருந்த நிலையை விட புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா, அல்லது மேம்படுத்தல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதனைப்பார்வையிட்டு, அதனடிப்படையில் வலிதான பிணிக்கும் தன்மையுடைய கட்டளை ஒன்றினை வழங்கவேண்டுமெனவும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளால் வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டது.

அதனடிப்படையில் இருதரப்பு சமர்ப்பணங்களைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்களம் மற்றும், காவல்துறையினர் அறிக்கைகள் சமர்ப்பிப் பதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் *27*ஆம் திகதி வழக்குத் திகதியிடப்பட்டுள்ளது.

மேலும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சால்பில் மன்றில் முன்னிலையான சட் டத்தரணிகளில் ஒருவரான எஸ். தனஞ்சயன் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை தொடர்பான *AR/673/18* என்னும் வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே, நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே நீதிமன்றால் வழங்கப்பட்ட இரண்டு கட்டளைகளை மீறி, நீதிமன்றக்கட்டளைகளை அவமதிப்பு செய்யும் விதமாக குருந்தூர்மலைப் பிரதேசத்தில் பௌத்த விகாரைக் கட்டுமானங்கள் தொடர்ந்து இடம்பெறுவதை, இதற்கு முந்திய வழக்குத் தவணையில் நீதிமன்றிற்குச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

மேலும் நீதவான் அவர்கள் நேரடி யாக வருகைதந்து ஏற்கனவே இருந்த நிலையை விட புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா, அல்லது மேம்படுத்தல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதனைப் பார்வையிட்டு, அதனடிப்படையில் வலிதான பிணிக்கும் தன்மையுடைய கட்டளை ஒன்றினை வழங்கவேண்டுமென நாம் கேட்டிருக்கின்றோம்.

அந்தவகையில் இந்த வழக்கானது தொல்பொருள் திணைக்களத்தினதும், சம்பந்தப்பட்ட தரப்பினரதும் பதிலுக்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் *27*ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டிருக்கின்றது - என்றார்.

## இனமான... தொடர்ச்சி ...

எழுதி வந்த இலக்கிய படைப்பாளி நீங்கள்.

*2009* பின்னரான ஆயுதப் போராட்ட மௌனிப்பின் பின்னரும் எவ்வித சலனமும் இல்லாமல் "இலக்கு"மின்னிதழிலும் மற்றும் பல்வேறு இணையத் தளங்களிலும் வாழும் வரை மாவீரர் நினைவுகளையும், தேசியத்தலைவரின் ஒவ்வொரு ஆண்டின்அகவை நல் நாளில் வாழ்த்துப்பாக்களையும் தவறாமல் வழங்கி வந்துள்ளீர்கள்.

*தனது சொந்த இடமான யாழ் மாவட்டத்தில் இருந்து *1995* ல் சிறிலங்கா இராணுவத்தின் பாரிய நடவடிக்கையில் ஒட்டுமொத்த மக்களும் இடம்பெயர்ந்த போது தனது குடும்பத்துடன் வன்னியில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஊற்றுப்புலம் கிராமத்திற்கு வந்து அங்கு வழங்கப்பெற்ற காணியினை காடுவெட்டி களனியாக்கி பசுஞ்சோலையாக்கி இந்த மண்ணில் சுய பொருளாதாரத்துடன் வாழமுடியும் என இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டி வாழ்ந்து காட்டிய சுய உழைப்பாளி.

*இக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரிடமும் அன்பாய் வாழ்ந்து அவர்களின் நல் வாழ்வுக்கு வழிகாட்டியவர் நீங்கள்.

*எனது பணியின் நிமித்தம் அக்கிராமம் செல்கின்ற போது அவரது இல்லத்திற்கு சென்றால் அம்மா, அப்பா என்ற உரிமையோடு எம்மை உபசரித்து சமகால எதிர்கால விடயங்களையும் மக்கள் நலன் விடயங்களையும் அறிவுபூர்வமாக எடுத்துக்கூறி எங்களது பணிக்கு ஊக்கப்படுத்துவீர்கள்.

அன்பான தந்தையே!

தமிழ்தேசியத்தின் வழியில் நின்று மக்களையும் மண்ணையும் ஆழமாக நேசித்து விடுதலைப்பற்றினால் மக்கள் மனங்களில் காலத்தால் அழியாத உயரிய மாவீரத் தந்தையாகவும்தேசப்பற்றாளனாகவும் நிலைத்து நிற்கின்றீர்கள்.

உங்களது இழப்பால் துயருறும் உறவு கள் அனைவருக்கும் எங்கள் ஆறுதலை பகிர்கின்றோம்.

தனது ஆழமான இறைபற்றினாலும் விசுவாசத்தினாலும் நித்திய வான்வீட்டிற்கு எடுத்துக்கொள்ள இருக்கின்றார் என்பதை நன்கு உணர்ந்து எல்லோருடனும் மகிழ்வாக அன்பை பகிர்ந்து."பிதாவே என்னை மன்னியும்" என்ற இறுதி வார்த்தையோடு (விண்ணக வாழ்விற்கு தயாரானதை) உயிரை துறந்தீர்கள் என மகன்( பாதர் றெஜினோல்ட்) உங்கள் மீது வைத்திருந்த தந்தைக்குரிய ஆழமான அன்பை உள்ளத்தில் இருந்து வெளிப்படுத்தினார்.

இறைதந்தையின் அரியணையில் நித்திய பேரின்பத்தை நீங்கள் பெற்றுவாழ உங்களுக்காக எங்கள் செபவேண்டுதலும் இருக்கட்டும். அமைதியில் இளைப்பாறுங்கள்.

உங்களுடன் அன்புடன் நாம் பழகிய வகையில் நீங்கள் மற்றவர்களுடன் எவ்வாறு வாழ்ந்து வழிகாட்டினீர்கள் என்பதை உங்களது புரிதலுடன் கற்றுக்கொண்ட எண்ணப் பரிமாணங்களை எழுத்துருவில் இறுதிவணக்கமாக காணிக்கையாக சமர்ப்பிப்பதில் ஆத்ம மனநிறைவடைகின்றேன்.தாயக விடுதலை போராட்ட பயணத்தில் இறுதிவரை நீங்கள் வைத்திருந்த நம்பிக்கை பற்று உறுதி தியாகம் பன்முக ஆளுமை செயற்திறன் நீங்கள் வாழ்ந்த வாழ்வியல் தாயக மக்களை மேலும் உறுதியூட்டுவதுடன் தாயக மீட்பின் இலட்சிய பயணிப்பில் அசையாத நம்பிக்கையுடன் இலக்கு வாராந்த மின்னிதழ் *100* க்கு *(அக்டோபர் 18,2020)* நீங்கள் எழுதியகவிதையின் இறுதி வரி களையே உங்கள் புகழுடலின் சத்தியமாக உறுதியெடுத்துக்கொள்வோம்.

*("சுய நலத்தின் வேரறுத்து பிரிவினைக்கு இடங்கொடாது ஒன்றுபட்டுக்கரமிணைத்து மனித நேயம் வளர்த்தெடுத்து மனோதிடத்தில் தளராது மாற்றான் பேச்சில் மயங்கிடாது இனமான உணர்வோடு தன்னாட்சி வென் றெடுப்போம்"* ***மாரீசன்)***

• • •

## முடக்கப்பட்ட ... தொடர்ச்சி...

இடம்பெறும் எண்ணமுள்ளதாயின் அது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அத்தோடு பெருந்தோட்ட தொழிற்றுறையின் எழுச்சி கருதியும், நாட்டின் தேசிய வருமான மேம்பாடு கருதியும் தன்னையே அர்ப்பணித்து செய்யப்படுபவர்களாக தோட்டத் தொழிலாளர்கள் விளங்குகின்றனர். பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் அவர்கள் அல்லல்படும் நிலையில் அவர்களை புறந்தள்ளிவிட்டு வெளியாருக்கு பயிரிடப்படாத காணிகள் வழங்கப்படுமானால் அது மிகப் பெரும் துரோகமாகும். இந்நிலையில் தேயிலைக்கே உரமான தொழிலாளர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு வலுசேர்க்கும் வகையில் பயிரிடப்படாத காணிகளை அம்மக்களுக்கே பகிர்ந்தளித்து அவர்களின் வாழ்வில் ஒளியை ஏற்படுத்த அரசாங்கமும், கம்பனியும் முனைதல் வேண்டும். அதைவிடுத்து வக்கிர எண்ணங்களால் தொடர்ந்தும் பெருந்தோட்ட சமூகம் புறக்கணிக்கப்படுமிடத்து அதனால் ஏற்படும் தழும்புகள் இலங்கையின் தேகத்தில் ஆழப்பதியும் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

## இந்தியாவின் ... தொடர்ச்சி...

என்பதை வலியுறுத்தியுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் இங்குள்ள மக்களின் செழிப்பிற்காகவும் அனைத்து தரப்பினரினதும் நன்மைக்காகவும் இந்தியா ஜப்பான் இலங்கை இணைந்து செயற்படுவதற்கான பல வாய்ப்புகள் உள்ளன எனவும் இந்திய தூதுவர் தெரிவித்துள்ளார்.

இது இலங்கையின் முன்னுரிமைகளின் அடிப்படையில் காணப்படவேண்டும். இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையின் மூன்று முக்கியமான தூண்களின் சங்கமத்தில் இலங்கை உள்ளது எனவும் இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

## பொருளாதார ... தொடர்ச்சி ...

உறவுகள்இங்குள்ள தேசியம்சார்ந்தவர்களை கொண்டு மேற்கொண்டு எமது வளங்கள் பறிபோவதை தடுக்கமுன்வரவேண்டும். பறிபோனதன் பின்னர் காணி பறிபோகின்றது, சிங்களவன் அபகரிக்கின்றான் என்று கூப்பாடு போடுவதில் எந்த பலனும் ஏற்படப்போவதில்லை.

• • •

## நிதி பற்றாக்குறை ... தொடர்ச்சி...

பி.பி.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

2027 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் பி.பி.சி நிறுவனம் 400 மில்லியன் பவுண்ஸ்களை சேமிக்க திட்டமிட்டுள்ளது. தொலைக்காட்சி அனுமதி பத்திரத்திற்கான மக்களின் கட்டுப்பணத்தை பிரித்தானியா அரசு அதிகரிக்காது நிறுத்தி வைத்திருப்பது பி.பிசி நிறுவனத்திற்கு பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ள தாகவும், பிரித்தானியாவின் பண வீக்கமும் தம்மை பாதித்துள்ளதா கவும் பி.பி.சியின் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

மேலும் உலக நாடுகளில் நடத்தப்படும் பி.பி.சியின் தொலைக் காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளையும் குறைக்க அது திட்டமிடப்பட்டுள்ளது. அவை இணையவளி ஊடகங்களாக மாற்றப்படவுள்ளதுடன், பல நாடு களின் உள்ள சேவைகள் உலக சேவையுடன் இணைக்கப்படவுள் ளன.

பி.பி.சியின் இந்த முடிவால் அதில் பணியாற்றும் பலர் தமது பணிகளை இழக்கும் நிலை ஏற்படலாம் என தெரிவிக்கப்படு கின்றது.

## சிங்கள தேச ... தொடர்ச்சி...

பார்வையிட்டபோது, இங்கு இருந்த சிவலிங்கத்தின் மேற்பகுதி உடைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டுள்ளது.

சிவலிங்கத்தின் அடிப்பாகம் மற்றும் ஆவுடையார் பகுதிகள் இங்கே உடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணாமல் ஆக்கும் வேலைகளை இலங்கை அரசாங்கத்தினுடைய திணைக்களங்கள் மிகக் கச்சிதமாக செய்துவருகின்றன. இந்தச் செயற்பாடு முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரமல்ல வடக்கு கிழக்கெங்கும் சில அரசதிணைக்களங்கள் இவ்வாறான காணாமலாக்கும் வேலையை அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப செய்துவருகின்றனர்.

குறிப்பாக இந்த மணற்கேணிப் பகுதியைப் பொறுத்தவரையில் கடந்த 1970ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் 36குடும்பங்கள் இப்பகுதியில் இருந்ததாகவும், 200இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களுக்கு இப்பகுதியில் வயல் நிலங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறாக இப்பகுதியிலிருந்த தமிழ் மக்களால் வழிபடப்பட்டுவந்த சிவன் ஆலயமே தற்போது உடைக்கப்பட்டு காட்சிதருகின்றது.

இந்நிலையில்தற்போது இந்தஇடங்களைப் பௌத்தமயமாக்கும் வேலைப்பாடுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும், வண்ணாமடு என்ற இடத்திலும், மணற்கேணி என்ற இந்த இடத்திலும், கற்றூணடிப் பகுதியிலும் விகாரைகள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறாக எமது தமிழர்கள் வாழ்ந்த பூர்வீக நிலங்களில் விகாரைகளை அமைத்து, தமிழர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் தனது திணைக்களங்களினூடாக செய்துவருகின்றது. அதேவேளை இந்த பகுதிகளில் தாங்கள் வாழ்ந்ததற்குரிய ஆவணங்கள் பல தம்மிடம் இருப்பதாக இப்பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப்பகுதிகளில் கூட்டுறவுச்சங்கங்கள், கால்நடைப் பண்ணைகள், விவசாய பண்ணைகள் என இந்த பகுதிகள் சிறப்பாக இருந்ததை இப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இந் நிலையில் இவ்வாறான இந்த ஆக்கிரமிப்பாளர்களின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது, இப் பகுதிகளில் எமது மக்களை சிறுபான்மையினராக்கி, சிங்களவர்களை இப்பகுதியில் மேலும் குடியேற்றி பெரும்பான்மையினராக்கும் வகையில் குடியேற்றங்களை மேற்கொள்ளப்போகின்றார்கள் என்பதை இவ்விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன - என்றார்.

**முற்றும்**

## ஏமாற்றும் தரப்பு ... தொடர்ச்சி ...

எம்மை பொறுத்த வரையில் இந்த உலகில் யாரும் எதிரிகள் இல்லை. எல்லா நாடுகளும் எமக்கு எதிராக செயற்பட்டவர்களே. சிலர் நேரிடையாக எம்மை அழித்தனர், சிலர் மறைமுகமாக எம்மை அழித்தனர் அவ்வளவு தான். சிலர் நம்பவைத்து ஏமாற்றினார்கள், சிலர் ஆரம்பம் முதலே எம்மை அணுகவில்லை அது தான் வேறுபாடு.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தீர்மானம் முன்வைக்கப்படும் போது சிலர் தமது நாட்டு நலனுக்கான அந்த தீர்மானத்தை முன்வைக்கின்றனர். சிலர் அதனை தமது நாட்டின் நலனக்காக எதிர்க்கின்றனர், சிலர் தமது நாட்டின் நலனுக்காக நடுநிலைமை வகிப்பதாக கூறுகின்றனர்.

ஈழத்து கவிஞர் புதுவை இரத்தினதுரை அண்ணா கூறியது தான் இப்போது நினைவில் வருகின்றது. அதாவது உண்மைக்கு முன்னால் நடுநிலமை என்பது இல்லை என்பது தான் அதன் பொருள். அதாவது இங்கு எல்லோரும் தமது நலன்களை முன்நிறுத்தி எம்மை பயன்படுத்தி வருகிறார்களே தவிர யாரும் எமக்காக இல்லை என்பது தான் வருத்தம்.

அதனை நாம் புரிந்துகொண்டால் எமக்கான அடுத்த வழி பிறக்கும். அனைத்துலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை புரிந்தவர்களாக நாம் எமது விடுதலைப் பயணத்தை நகர்த்த வேண்டும். ஏமாற்றும் தரப்புடன் தேங்கிவிடாது உலகில் தமிழ் மக்களுடன் இணைந்து பயணிக்கும் நாடுகளை இனம் காண்பது அல்லது அதற்கான புறச்சூழல்களை உருவாக்குவது என்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமெனில் தமிழ் மக்களிடம் தெளிவான கருத்துக்களை கொண்டு செல்லக் கூடிய அவர்களின் இலட்சியத்திற்கு துணைநிற்கும் ஊடகம் தேவை.

தமிழ் தேசியத்தை வலுப்படுத்தி எம் இனத்தையும், சமூகத்தையும் ஆற்றல்படுத்தி, ஆற்றுப்படுத்தும் ஊடகமாக இலக்கு ஊடகத்தை வளர்த்தெடுப்பதில் அதில் வெளிவரும் ஆசிரியர் தலையங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே தான் எமது இனத்தின் சிந்தனை பள்ளியின் ஒரு அங்கமாக அதனை நாம் பார்ப்பதுடன், இன்று நூலாகவும் வெளியிட்டுள்ளோம். சர்வதேச மற்றும் தாயக அரசியலை இணைத்து பயணிக்க வேண்டியது இன்று எமது தேவையாகின்றது.

உலகமயமாக்கல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையும் எமக்குள்ளது. அதற்கு இலக்கு ஊடகம் வலுச்சேர்க்கும் என்பது எமது நம்பிக்கை அந்த நம்பிக்கையை பலப்படுத்த வேண்டிய கடமை உங்களிடம் உள்ளது. அதனை தமிழ் மக்கள் வழங்க வேண்டும்.

• • •

## கச்சதீவுக்குக்கு ... தொடர்ச்சி...

**இன இடையாளங்கள் அண்மைக்காலத்தில் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. நெடுந்தீவிலும் வெடியரசன் கோட்டையை பௌத்த - சிங்கள சின்னத்தைக் கொண்டது எனக் காட்டிக் கொள்வதற்கான முயற்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இது குறித்த உங்கள் கருத்து என்ன?**

இதுபோன்ற விடயங்களில் எனக்கு நிறைந்த அனுபவம் உள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நான் முன்னர் இருந்த போது குருந்தூர் மலையாக இருக்கலாம் அல்லது நீராவியடிப் பிள்ளையார் கோவில் பிரச்சினையாக இருக்கலாம் - இவையெல்லாம் இந்து மக்களுடைய பாரம்பரிய வழிபாட்டுத் தலங்காக இருக்கின்றன. அவை அனைத்தும் இப்போது பௌத்த தலங்களாக மாற்றப்படுகின்ற தன்மை அதிகரித்து காணப்படுகின்றது.

இதுபோல நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையில் கூட கடற்படையினரால் விளம்பரப்பலகை ஒன்று போடப்பட்டிருந்தது. ஆங்கிலத்திலும், சிங்களத்திலும்தான் அந்த அறிவித்தல் போடப்பட்டிருந்தது. பௌத்த இடிபாடுகள் இங்கே உள்ளன என்பதை விளம்பரப்படுத்துவதாகவே அந்த அறிவித்தல் இருந்தது.

ஆனால், தமிழ் பௌத்தர்கள் இருந்துள்ளார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளதாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால், அரசாங்கம் இதனை இதுவரையில் ஏற்றுக்கொள்வதாக இல்லை. போருக்கு பின்னரான காலப்பகுதியில் உள்நோக்கம் ஒன்றை வைத்துக்கொண்டு தனித் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்கின்ற, வரலாற்றை திரிவுபடுத்துகின்ற செயற்பாடுகளுக்காக இவ்வாறான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு எங்களுடைய வரலாறு இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது என்பதுதான் என்னுடைய கருத்தாக இருக்கின்றது.

• • •